# பரிபூரண ஜீவன்

# PARIPOORANA JEEVAN

## சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்

மத்தேயு 28:20

TAMILNADU ASSEMBLIES OF GOD NEWS MAGAZINE

January - February 2022
Volume : 62

ஆண்டு சந்தா ₹ 100/-
Issue : 1

# 73rd Annual Conference-2021
























ஆசிரியரிடமிருந்து........!



## சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன்

(மத்தேயு 28:20)

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே! உங்கள் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த 2022-ம் ஆண்டின் துவக்கத்தில் நம் கர்த்தர் நம்மை பார்த்து, “மகனே! மகளே! சகல நாட்களிலும் நான் உன்னுடனே கூட இருக்கிறேன்” என்று வாக்குப்பண்ணுகிறார். உலகில் பிறக்கும் மனிதனுக்குத் தாயோ, தந்தையோ, மனைவியோ, கணவரோ, பிள்ளைகளோ சகல நாட்களும் துணையாக இருந்து உதவுவது முடியாத காரியம். ஆனால், நமது வாழ்நாள் முடியும் வரை கூடவே இருந்து நம்மை நடத்தக்கூடிய வல்லமையுள்ளவர் நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து. சகல நாட்களிலும் நம்மோடிருக்கும் இயேசு கிறிஸ்து எவ்விதங்களில் நம்மோடிருப்பார் என்பதை மத்தேயு 28-ம் அதிகாரத்தின் வாயிலாகவே சில காரியங்களை உங்களோடு பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

### 1. வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுகிறவராக உங்களோடிருப்பார்
### As one who GUARANTEES to fulfill his promises

மத்தேயு 28:6-ம் வசனத்தில், ‘அவர் உயிர்த்தெழுந்தார்’ என்று எழுதப்படாமல் “தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார்” என்று கூறப்பட்டுள்ளது. அவர் சொன்னது நிறைவேறும் என்பது இங்கு வலியுறுத்தப்பட்டுள்ளது. நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்றவர் தாம் சொன்னபடியே செய்கிறவர். ஒருமுறை இயேசு தம்முடைய சீஷர்கள் இரண்டு பேரை நோக்கி, ஒருவரும் ஏறியிராத கழுதைக்குட்டி இருந்த இடத்தைக் குறித்து துல்லியமாகக் கூறினார் (லூக்கா 19:30). அவர்கள் போய், தங்களுக்கு அவர் சொன்னபடியே கண்டார்கள் (லூக்கா 19:32). இது ஆச்சரியமன்றோ? ஒருநாள் இராஜாவிடம் வேலை செய்த ஒரு மனிதன் தன் குமாரனின் சுகத்துக்காக இயேசுவிடம் வந்தான். அப்போது அவர், ‘உன் குமாரன் பிழைத்திருக்கிறான்’ என்று கூறினார். அந்நேரத்தில் தானே, அவன் குணமடைந்தான் என்று வேதம் கூறுகிறது (யோவான் 4:50-53). ஆம், அவர் சொன்னபடி செய்கிறவர்.

அன்பானவர்களே! தேவன் உங்களுக்குக் கொடுத்த வாக்குத்தத்தங்கள் அனைத்தையும் இவ்வாண்டில் தேவன் நிச்சயம் நிறைவேற்றுவார். ‘நான் உங்களுடனே கூட இருக்கிறேன்’ என்று வாக்களித்தவர், தமது வாக்கை சொன்னபடியே நிறைவேற்றுவார் (எண்.23:19)! கர்த்தரால் உங்களுக்கு சொல்லப்பட்டவைகள் நிறைவேறும் (லூக்கா 1:45)!

## 2. உங்களுக்கு முன்னே போகிறவராக உங்களோடிருப்பார்
## As one who GOES before you

மத்தேயு 28:7-ம் வசனத்தில், 'அவர் உங்களுக்கு முன்னே போகிறார்' என்று கூறப்பட்டுள்ளது. ஆம், 'நான் உங்களுடனே கூட இருக்கிறேன்' என்று சொன்னவர், இவ்வாண்டு முழுவதும் ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு நிமிடமும் உங்களுக்கு முன்னே போகிறவராகக் காணப்படுவார். அவர் கலிலேயாவுக்குத்தானே முன்னே போகிறதாகச் சொன்னார்; எனக்குமுன் எப்போதும் செல்லுவாரா? என்று சந்தேகம் உங்களுக்குள் எழ வேண்டாம். மேய்ப்பன் தன்னுடைய ஆடுகளை வெளியே விட்டபின்பு, அவைகளுக்கு முன்பாக நடந்து போகிறான் என்று வேதம் கூறுகிறது (யோவான் 10:4). தேவப் பிள்ளையே, நாம் அவரது கைக்குள்ளான ஆடுகளன்றோ? அவர் நமது பரம மேய்ப்பன் அல்லவா? பரம மேய்ப்பரான இயேசு கிறிஸ்து இந்த ஆண்டு முழுவதும் நமக்கு முன் செல்லுகிறவராக இருப்பார்.

மத்தேயு 8:23-ல், இயேசு கிறிஸ்து படகில் ஏறின பின்புதான், அவருடைய சீஷர்கள் அவருக்கு பின்சென்று ஏறினார்கள் என்று வாசிக்கிறோம். ஆம், கிறிஸ்தவ வாழ்க்கையாகிய கடலில் பயணம் செய்யும் நம்மோடு, நமது இரட்சகர் இயேசு, நமக்கு முன்னதாகவே சென்று படகில் அமர்ந்திருக்கிறார். புயல் வரட்டும். கொந்தளிப்பு வரட்டும். நமக்கு பயமில்லை. நாம் தைரியமாக கிறிஸ்தவப் பயணத்தில் தொடர்ந்து முன்னேறலாம்! வேதம் சொல்கிறது: கர்த்தர் உங்கள் முன்னே போவார். இஸ்ரவேலின் தேவன் உங்கள் பிறகே உங்களை காக்கிறவராயிருப்பார் (ஏசாயா 52:12). கர்த்தர் உங்கள் முன்னே போய் கோணலானவைகளைச் செவ்வை யாக்குவார், தடைகளை தகர்த்து போடுவார், அற்புதங்களை செய்வார் (ஏசாயா 45:2; மீகா 2:13; உபா. 31:8)!

## 3. வாழ்த்தி ஆசீர்வதிக்கிறவராக உங்களோடிருப்பார்
## As one who GREETS and blesses you

மத்தேயு 28:9-ம், வசனத்தில், இயேசு தாமே அவர்களுக்கு எதிர்ப்பட்டு: வாழ்க' என்றார். நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்று சொன்ன இயேசு, உங்களை சந்திக்கிறவர்; உங்களை நலம் விசாரிக்கிறவர்; உங்களை வாழ்த்துகிறவர். உலகில் சிறியவர் பெரியவர்களைப் பார்த்து, 'வாழ்க' என்று வாழ்த்துவது இயல்பு; மட்டுமின்றி, சில தலைவர்களைப் பார்த்தும் மக்கள், 'வாழ்க' என்று வாழ்த்துவதை நாம் கேட்டிருக்கிறோம். ஆனால் இங்கே, சர்வத்தையும் உண்டாக்கின தேவாதி தேவன் அற்பப் பூச்சிகளைப் போல் காணப்படும் உங்களைச் சந்திக்கிறார். 'வாழ்க' என்று வாழ்த்துகிறார்.

இயேசு கிறிஸ்து இந்தப் புத்தாண்டில் உங்களை தனியே சந்தித்து, 'நீ வாழ்க' என்று கூறுகிறார், "பிரியமானவர்களே, உன் ஆத்துமா வாழ்கிறது போல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வேண்டுகிறேன்" என்று வேதம் கூறுகிறது (3 யோவான் 2). ஆம் பிரியமானவர்களே, நீங்கள் ஆவிக்குரிய பிரகாரமாகவும், சரீரப்பிரகாரமாகவும் இவ்வாண்டு வாழ்ந்து சுகமாயிருக்க தேவன் அருள்புரிவார்!

## 4. பயத்தை போக்குகிறவராக உங்களோடிருப்பார்
## As one who GIVES freedom from your fears

மத்தேயு 28:10-ம் வசனத்தில், 'இயேசு அவர்களை நோக்கி: பயப்படாதிருங்கள்' என்றார். ஆம், இயேசு நம்மோடிருக்கும்போது நாம் பயப்பட வேண்டிய அவசியமில்லை. இயேசு சிலுவையில் அறையப்பட்டு மரித்த பின்பு, சீஷர்கள் யூதர்களுக்கு பயந்ததினால், பூட்டப்பட்ட ஒரு அறைக்குள் கூடியிருந்தனர். இயேசு கிறிஸ்து கல்லறையில் இல்லை, உயிர்த்தெழுந்தார் என்பதை அவர்கள் அறியவில்லை. அறையைப் பூட்டிக் கொண்டு உள்ளே பயத்தோடு காணப்பட்ட சீஷர்களின் மத்தியில், இயேசு உயிர்த்தெழுந்தவராக வந்து நின்று, 'உங்களுக்குச் சமாதானம்' என்று கூறினார் (யோவான் 20:19).

அன்பானவர்களே! கடந்த இரண்டு ஆண்டுகளாக கொரானா நிமித்தமாக பலவித கஷ்டங்கள், தோல்விகள், இழப்புகள், ஏமாற்றங்களை நீங்கள் சந்தித்து இருக்கலாம். இன்று, நீங்கள் எந்த சூழ்நிலையைக் கண்டு பயந்து வாழ்ந்து கொண்டிருக்கிறீர்களோ, அந்த சூழ்நிலையில் உயிர்த்தெழுந்த இயேசு, 'நான் உங்களுடனே கூட இருக்கிறேன்' என்று கூறி, உங்களுக்கு சமாதானத்தை தந்தருளுவார். கர்த்தர்: நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன் (ஏசாயா 41:10). நீ பயப்படாதே, நான் உனக்கு துணைநிற்கிறேன் (ஏசாயா41:13). நீ பயப்படாதே; உன்னை மீட்டுக் கொண்டேன்; உன்னை பேர் சொல்லி அழைத்தேன்; நீ என்னுடையவன். நீ தண்ணீர்களைக் கடக்கும்போது நான் உன்னோடு இருப்பேன் என்று வாக்குப்பண்ணியுள்ளார் (ஏசாயா 43:1, 2) !

## 5. அதிகாரம் அளித்து பயன்படுத்துகிறராக உங்களோடிருப்பார்
## As one who GRANTS authority to use you

மத்தேயு 28:18, 19ம் வசனங்களில், 'இயேசு சீஷர்களை நோக்கி: வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்குங்கள்' என்று கூறினார். நம்முடன் கூட இருக்கிறேன் என்று வாக்குப்பண்ணினவர் வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் படைத்தவர். வேதத்தில் நூற்றுக்கு அதிபதியின் அதிகாரத்தைக் குறித்துக் காண்கிறோம். ஒருவனைப் 'போ' என்றால் அவன் போகிறான். மற்றொருவனை 'வா' என்றால் அவன் வருகிறான் (லூக்கா 7:8). இது பூமியில் சிலர் பெற்றிருக்கும் அதிகாரம். ஆனால், இயேசுவுக்கோ பூமியில் மட்டுமல்லாமல் வானத்திலும் அதிகாரம் உண்டு. அவர் வானத்தின் கதவைப் பூட்டினால் யாரும் திறக்க முடியாது. அவர் வானத்தின் கதவைத் திறந்தால் யாரும் பூட்ட முடியாது (வெளி. 3:7). இத்தகைய ஈடு, இணையற்ற அதிகாரம் படைத்தவர் இயேசு. அவருக்கு பாவங்களை மன்னிக்கிற அதிகாரம் உண்டு; அசுத்த ஆவிகளை துரத்த அதிகாரம் உண்டு; காற்றையும் கடலையும் அதட்ட அவருக்கு அதிகாரம் உண்டு; தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும், மறுபடியும் பெற்றுக்கொள்ளவும் அதிகாரம் உண்டு என்று வேதம் கூறுகிறது (மத்தேயு 9:6; லூக்கா 4:36; 8:24, 25; யோவான் 10:18).

இயேசு தம்முடைய அதிகாரத்தை உங்களுக்கு தந்து உங்களோடிருந்து இந்த ஆண்டில் அநேகருக்கு உங்களை ஆசீர்வாதமாகப் பயன்படுத்துவார் (மாற்கு 3:15; லூக்கா 9:1; 10:19). ஆகவே, எவ்விதமான பயத்துக்கும் நீங்கள் இடங்கொடாமல் சுவிசேஷத்தைத் தைரியமாகச் சொல்லுங்கள். இயேசுவின் அதிகாரத்தையும் கட்டளையையும் பெற்றுக்கொண்ட சீஷர்கள், புறப்பட்டுப்போய், எங்கும் பிரசங்கம் பண்ணினார்கள். கர்த்தர் அவர்களுடனே கூடக் கிரியையை நடப்பித்து, அவர்களால் நடந்த அடையாளங்களினாலே வசனத்தை உறுதிப்படுத்தினார் (மாற்கு 16:17-20).

அதேப்போல் நீங்களும் இந்த ஆண்டு கர்த்தருடைய அதிகாரத்தையும் வல்லமையையும் பயன்படுத்தி ஜெபத்தோடு ஆத்துமாக்களை ஆதாயம் செய்யுங்கள்! ஞானஸ்நானத்திற்குள் நடத்துங்கள்! சீஷராக்குங்கள்! கர்த்தர் உங்களோடிருந்து பெரிய காரியங்களைச் செய்வார்!

கடைசியாக பிரியமானவர்களே, இவ்வருடம் முழுவதும் தேவனுடைய வழியில் நடந்து, தேவப் பிரசன்னத்தை நமக்கு சொந்தமாக்கிக் கொண்டு அதின் மூலம் வரும் ஆசீர்வாதங்களை சுதந்தரிப்போம்! தேவப் பிரசன்னத்தை இழக்கச் செய்யும் அனைத்து காரியங்களையும் உங்களை விட்டு அகற்றுங்கள். பாவம், கீழ்படியாமை, முறுமுறுப்பு, புறங்கூறுதல் ஆகியவை தேவப்பிரசன்னத்தை இழக்கச் செய்யும் (நியாயா. 16:20; 1 சாமு. 16:14; எண்ணா. 12:9). இவைகளை களைந்துப்போடுங்கள். கர்த்தர் உங்களோடு இருந்து உங்களையும் உங்கள் குடும்பத்தையும், உங்கள் வேலைகளையும், ஊழியங்களையும் மேன்மேலும் ஆசீர்வதிப்பாராக! ஆமென்!

**Rev. Dr. ஜெரி டேனியல்**
(ஆசிரியர், பரிபூரண ஜீவன்)
மூத்த போதகர், சிட்டி ரிவைவல் ஏ.ஜி. சர்ச், திருச்சி

---

தாங்கள் பரிபூரண ஜீவன் பத்திரிக்கை மூலமாக ஆசீர்வதிக்கப்பட்டிருந்தால் உங்கள் சாட்சிகளை வாட்ஸ்அப் மூலமாகவோ, தபால் மூலமாகவோ தெரிவிக்கலாம். மேலும் ஆவிக்குரிய ஜீவியத்திற்கு பயனுள்ள செய்திகள், துணுக்குகள் ஆகியவற்றையும் அனுப்பலாம்.

**நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி**


**Rev. JERRY DANIEL**
303, C Block, Roshan Residency,
6, VOC Road, Cantonment, TRICHY - 620 001
Cell : 94434 15484


## 8 Rules for Spiritual Growth

Eight rules that promote good health in babies can be adapted and applied to a Christian's spiritual growth.

1. **Daily Food.** Take in the "pure milk of the word" through study and meditation (1 Pet. 2:2).
2. **Fresh Air.** Pray often or you will faint. Prayer is the oxygen of the soul (1 Thess. 5:17).
3. **Water.** We must be filled with the Holy Spirit (John 7:38, 39).
4. **Regular Exercise.** Put into practice what you learn in God's Word. Witness for Jesus (James 1:22).
5. **Adequate Rest.** Rely on God at all times in simple faith (Mark 6:31).
6. **Clean Surroundings.** Avoid evil company and whatever will weaken you spiritually (Eph. 5:11).
7. **Loving Care.** Be part of a church. Benefit from a pastor's teaching and Christian fellowship (Heb. 10:25).
8. **Periodic Check-ups.** Examine your spiritual health (1 Cor. 11:31).



# ஆதி சபையிலிருந்து கற்றுக்கொள்வோம்


Rev. P.S. ராஜமணி

இயக்குநர் - அகில இந்திய விஷன் 2020


## 17. யாருக்கும் பயப்படாமல் சத்தியத்தை தைரியமாய் பிரசங்கித்தனர்

தொடர்ச்சி

### அன்று

அப்போஸ்தல சபை விசுவாசிகளும் இயேசுவே கிறிஸ்து என்றும், உலக இரட்சகர் என்றும் தைரியமாய் பிரசங்கித்தனர், சாட்சி கொடுத்தனர். யூத மார்க்கம் எதிர்த்தது. ரோம அரசாங்கம் எதிர்த்தது. பயங்கர உபத்திரவம் உண்டானது. அப்போஸ்தலர் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டனர். கொலை செய்யப்பட்டனர். இரத்த சாட்சிகளாக மரித்தனர். அவர்கள் சத்தியத்தை தைரியமாய்ப் பேசி இராவிட்டால் இந்த உபத்திரவம் வந்திருக்காது. யோவானைத் தவிர மற்ற அப்போஸ்தலரும் இரத்த சாட்சிகளாக மரித்தனர்.

இயேசு கிறிஸ்து சத்தியத்தைப் பேசினதால் தான் சிலுவையில் அறையப்பட்டார். அப்போஸ்தலரை பலமுறை அடித்து உபத்திரவப்படுத்தினார்கள். ஆனால் அவர்கள் சோர்ந்து போகவில்லை. வசனம் சொல்லுவதைக் கவனியுங்கள். அவருடைய நாமத்துக்காகத் தாங்கள் அவமானமடைவதற்குப் பாத்திரராக எண்ணப்பட்டபடியினால், சந்தோஷமாய் ஆலோசனைச் சங்கத்தை விட்டுப் புறப்பட்டுப்போய், தினந்தோறும் தேவாலயத்திலேயும், வீடுகளிலேயும் இடைவிடாமல் உபதேசம் பண்ணி, இயேசுவே கிறிஸ்துவென்று பிரசங்கித்தார்கள். (அப்.5:41,42).

அடியோ, உபத்திரவமோ, மரணமோ, அவர்களை தடுத்து நிறுத்த முடியவில்லை. உபத்திரவத்தினாலே விசுவாசிகள் சிதறடிக்கப்பட்டார்கள். ஆனால் ஓடிப்போன எல்லா இடங்களிலும் இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியைப் பரப்பினார்கள். சபைகளை கட்டி எழுப்பினார்கள். எந்த உபத்திரவமும் சபை வளர்ச்சியைப் பாதிக்கவில்லை. சபை தொடர்ந்து வளர்ந்து உலகமெல்லாம் பெருகிற்று.

### இன்று

இன்றுள்ள ஊழியங்களும், பிரசங்கங்களும் யாரையும் புண்படுத்தக்கூடாது என்ற கருத்தில் நடத்தப்படுகிறது. பாவத்தைக் கண்டித்துப் பேசப் பயப்படுகிறார்கள். விக்கிரக வணக்கம் தவறு என்று சொன்னால் உபத்திரவம் உண்டாகும் என்று மிக கவனமாக பிரசங்கிக்கிறார்கள்.

இயேசு உங்களை நேசிக்கிறார், இயேசு உங்கள் கண்ணீரைத் துடைப்பார், வேதனைகளைப் போக்குவார், நோய்களிலிருந்து விடுதலை கொடுப்பார், ஆசீர்வாதம் தருவார் என்ற நிலையில் செய்திகள் இருக்கின்றன. இவை யாவும் உண்மைதான். ஆனால் மனிதர் யாவரும் பாவிகள். இயேசு கிறிஸ்து ஒருவரே பாவங்களைப் போக்க வல்லவர். அவர் ஒருவரே ஆராதனைக்கு உரியவர், விக்கிரகங்களை வணங்குவது பாவம் என்று தைரியமாக சொல்லப்

பயப்படுகிறார்கள். சத்தியத்தை ஞானமாய் சொல்ல வேண்டும் என்பது உண்மைதான். ஆனால் சத்தியத்தையே சொல்லாமல் இயேசு தரும் உலக நன்மைகளையே சொல்லுவது சத்தியமுமல்ல, இயேசு கிறிஸ்துவைப் பற்றிய நற்செய்தியுமல்ல. சத்தியத்தைச் சொன்னால் உபத்திரவம் வரும், எதிர்ப்பு வரும் என்பது உண்மைதான். எதிர்ப்பு வராத செய்தியை சொல்ல வேண்டுமானால் சத்தியத்தை மறைத்து பொய்யான செய்திகளைத் தான் சொல்ல வேண்டிவரும்.

எல்லா மதமும் ஒன்று தான். எல்லாக் கடவுள்களும் ஒன்றுதான் என்று சொன்னால் எல்லாரும் ஏற்றுக்கொள்வார்கள். ஆனால் இது பொய்யான செய்தி எல்லாரும் ஏற்றுக்கொள்ளுவதற்கான போதனையைப் போதிக்கின்றவர்கள் மனிதனைப் பிரியப்படுத்தி தேவனை துக்கப்படுத்துகிறார்கள். இயேசு கிறிஸ்துவைத் தவிர வேறு இரட்சகர் இல்லை. மனிதனை பாவத்திலிருந்து விடுதலையாக்க தக்க சக்தி இந்த உலகத்தில் எந்த மதத்திற்கும், எந்த மனிதருக்கும் இல்லை. மனிதனை பரலோகம் கொண்டு செல்ல ஒரே வழி இயேசு கிறிஸ்துவே என்று தைரியமாய் முழங்குகிறவர்கள் அதிகம் எழும்ப வேண்டும்.

இந்திய அரசியல் சட்டப்படி எந்த ஒரு குடிமகனும், எந்த ஒரு கொள்கையை நம்பவும், அதன்படி நடக்கவும் அதை பிரச்சாரம் செய்யவும் உரிமை உண்டு. கடவுள் இல்லை என்று நம்பும் மக்கள் நமது தேசத்தில் ஏராளம். கடவுள் இல்லை, கடவுளை நம்புகிறவன் முட்டாள் என்று நம்புகிறார்கள், எழுதுகிறார்கள், அதை பிரசங்கிக்கிறார்கள். அதற்கு எதிர்ப்பு அதிகம் இல்லை. ஆனால் இயேசு ஒருவரே இரட்சகர் என்று பிரசங்கித்தால் எதிர்ப்பு வருகிறது. பயப்படாமல் பிரசங்கிக்க பரிசுத்த ஆவியானவர் கிருபை தருவாராக.

- தொடரும்

---

## ஜெபியுங்கள் ! தாங்குங்கள் !!

பரிபூரண ஜீவன் பத்திரிக்கை ஊழியத்தின் மூலம் நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பீர்கள், எனவே உங்கள் சாட்சிகளை எழுதி அனுப்புங்கள். பத்திரிக்கை ஊழியத்தின் தேவையை சந்திக்க ஒரு வெளியீட்டிற்கு ஆகும் செலவு ரூ.**1,00,000** உதாரத்துவமாய் கொடுத்து உதவுங்கள் அல்லது உங்களால் இயன்ற அளவு கொடுத்து பத்திரிக்கை ஊழியத்தை தாங்குங்கள். இவை எல்லாவற்றிக்கும் மேலாக தொடர்ந்து இந்த ஊழியத்திற்காக ஜெபியுங்கள் நன்றி.

---

## பரிபூரண ஜீவன் பத்திரிக்கை சந்தா மற்றும் உதவித் தொகை அனுப்ப வேண்டிய விபரம்

குறிப்பு:- காசோலை / டிராப்ட் எடுக்கும்போது
**Tamil District Council of SIAG** என்று எடுத்து
பரிபூரண ஜீவன் பத்திரிக்கைக்கு என்று குறிப்பிட்டு அனுப்பவும்.
மணியாடர் அனுப்புவதை தவிர்க்கவும்.
பத்திரிக்கை ஊழியத்திற்கு மணியாடர் மூலம் தான் அனுப்ப முடியும் என்ற நிலையில் உள்ளவர்கள் கீழ்காணும் முகவரிக்கு அனுப்பவும்.

**ஏ.ஜி. தலைமை அலுவலகம்**
**30, நாவலர் நகர், மதுரை - 625 016. போன் : 0452 2301165.**



# வேதாகம குடும்பங்கள்


## Rev. J. ஸ்டேன்லி மாணிக்கராஜ்

Secretary, Tamil District Council of SIAG,
Senior Pastor, A.G.Church, Vellore-6.


ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

நம்முடைய பிரதேச ஊழியர்களுக்கும், விசுவாசிகளுக்கும் எங்களுடைய புத்தாண்டு வாழ்த்துதலை தெரிவித்துக்கொள்கிறோம். இன்னும் ஒரு ஆண்டை காணசெய்த தேவாதி தேவனுக்கு மகிமையும் கனமும் உண்டாவதாக!

புதிய ஆண்டிலே புதிய தீர்மானங்களை நாம் நிச்சயமாக எடுத்திருப்போம். அவைகளை செய்வதற்கு தேவையான கிருபைகளை கர்த்தர் நமக்குத் தருவாராக. குடும்பமாக இந்த ஆண்டு நாம் செய்யவேண்டிய எளிமையான நடைமுறையான காரியங்களை வேதாகம குடும்பங்களின் அடிப்படையில் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். இவைகளை நாம் ஏற்கனவே அறிந்திருந்தாலும், பரிசுத்த ஆவியானவர் மீண்டுமாய் இவைகளை செய்வதற்கு உதவி செய்வாராக.

**1. கர்த்தருடைய வார்த்தைக்கு முற்றிலுமாக கீழ்ப்படிகிற குடும்பம்** (ஆதி. 6:9, 22)
**A family that obeys to God completely.** (Gen.6:9, 22)

நோவாவின் குடும்பம் கர்த்தர் சொன்னதை அப்படியே செய்ததற்கு நமக்கு மாதிரியாக இருக்கின்றது. தெரியாத தொழில், பழக்கமில்லாத வேலை, முழுமையாக விளங்காத தேவதிட்டம் இவைகளின் மத்தியிலே கர்த்தர் என்ன சொன்னாரோ அதை அப்படியே நோவா பின்பற்றினதினால், அவருடைய குடும்பம் அழிவிலிருந்து மீட்கப்பட்டது. இன்றைய காலகட்டங்களில் விசுவாசிகளும் ஊழியர்களும் எழுதப்பட்ட தேவ வார்த்தைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து, அவைகள் நமக்கு விளங்குகிறதோ இல்லையோ, ஒத்து வருகிறதோ இல்லையோ முற்றிலுமாக கீழ்ப்படிய ஒப்புக்கொடுக்க வேண்டும். எழுதப்பட்ட தேவ வார்த்தைகளுக்கு வெளியே தீர்க்கதரிசனங்களை தேடவேண்டிய அவசியம் நமக்கு இல்லை.

- நாம் முழுமையாக கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியும்போது நம்முடைய வாழ்க்கை சரியான பாதையில் செல்லும்.
- குடும்ப ஒற்றுமை விளங்கும்.
- பிள்ளைகள் கீழ்ப்படிவார்கள்.
- தேவனுடைய பாதுகாப்பும் ஆசீர்வாதமும் உண்டு.
- தேவனுக்கு பயப்படும் பயம் பெருகும்.

நோவாவின் குடும்பம் நமக்கு கற்றுக்கொடுக்கிற மேற்கண்ட சத்தியங்களை அனுபவிக்க கர்த்தருடைய வார்த்தைக்கு முற்றிலுமாய் கீழ்ப்படிய நம்மை அர்ப்பணிப்போம்.

**2. கர்த்தரை தொடர்ச்சியாக விசுவாசிக்கும் குடும்பம்** (ஆதி.12:3).
**A family that trusts God regularly.** (Gen.12:3)

ஆபிரகாமின் குடும்பம் கர்த்தர் கொடுத்த வாக்குறுதிகளை தொடர்ச்சியாக விசுவாசித்ததற்கு நமக்கு மாதிரியாக இருக்கின்றது. கர்த்தர் சொன்ன வார்த்தைகளை நம்பிபோகிற இடம் இன்னதென்று அறியாமல் (எபி. 11:8), புறப்பட்டுப்

போனார். கர்த்தர் சொன்ன வார்த்தைகளை நம்புவதற்கு ஏதுவல்லாதிருந்தும், நம்பிக்கையோடு விசுவாசித்தான் (ரோமர் 4:18). தன் மனைவியின் கர்ப்பம் செத்துப்போனதை எண்ணாமலும், தேவனுடைய வாக்குத்தத்தத்தை சந்தேகப்படாமலும், வாக்குத்தத்தம் பண்ணினவர் நிறைவேற்ற வல்லவராயிருக்கிறார் என்று முழு நிச்சயமாய் நம்பினார் (ரோமர் 4:19-21). ஆகவே சரித்திரத்தில் நடக்காத ஒன்றை கர்த்தர் அவருடைய வாழ்க்கையிலே நடக்கப் பண்ணினார்.

இந்த ஆண்டு நம்முடைய வாழ்க்கையின் எல்லா தேவைகளுக்கும், பொருளாதாரங்களுக்கும், பிள்ளைகளுடைய வேலை மற்றும் கல்விகளுக்கும், திருமணங்களுக்கும், வாழ்க்கையின் உயர்வுகளுக்கும் ஆண்டவரை மட்டுமே தொடர்ச்சியாக விசுவாசிப்போம் என்று தீர்மானம் எடுத்து முழுமனதோடு செயல்படுவோம். சின்ன காரியங்களிலும் கர்த்தரை விசுவாசிப்பதை நம் பிள்ளைகளுக்கும் கற்றுக் கொடுப்போம்.

### 3. கர்த்தரோடு அடிக்கடி நேரம் செலவிடும் குடும்பம் (ஆதி.24:63)

### A family that spends time with God frequently. (Gen.25:21; 25:22)

ஈசாக்கின் குடும்பம் ஜெபத்திற்கு ஒருமாதிரியாக இருக்கின்றது. தனக்கு மனைவியை தேடிவிட்டு மனிதர்கள் போனபொழுது ஈசாக்கு ஜெபித்து, தியானம் பண்ணும்படி வயல்வெளிக்கு போனார். ஈசாக்கு தன் மனைவிக்காக கர்த்தரை நோக்கி வேண்டுதல் செய்தார். அவருடைய மனைவியும் கர்த்தரிடத்தில் விசாரிக்கும்படி போனார்கள்.

இன்றைய காலகட்டங்களில் தேவைக்காக, வியாதிக்காக, பிரச்சனைக்காக மட்டும் ஜெபிக்கின்ற குடும்பங்கள் அதிகம். ஜெபம் என்பது தேவைகளின் அடிப்படையில் செய்யப்படவேண்டிய ஒன்று அல்ல. அது அனுதினமும் தேவனோடு பேசும் ஒருபழக்கம் என்பது நாம் அறிந்ததே. ஜெபிக்கின்ற குடும்பம் நிச்சயமாக அன்பான, புரிந்துகொள்ளுகிற, சந்தேகப்படாத, ஒருவருக்கொருவர் ஆதரவாக இருக்கின்ற ஆசீர்வாதமான குடும்பமாக இருக்கும் என்பதில் எந்தளவும் சந்தேகமில்லை.

உங்கள் மனைவியோடு சேர்ந்து கொஞ்ச நேரமாவது ஜெபியுங்கள். வாரம் ஒருமுறையாவது உபவாசித்து இருவரும் ஜெபியுங்கள். பிள்ளைகளின் தலைகளின் மேல் கைகளை வைத்து ஜெபிப்பது மட்டுமல்லாது, பிள்ளைகளோடு சேர்ந்து ஜெபிக்கவும் தீர்மானம் எடுப்போம். இந்த ஆண்டு குடும்பமாய் ஜெபிக்கின்ற ஜெபங்களை தேவன் அதிகப்படுத்தித் தருவாராக.

### 4. கர்த்தருக்குள் பிள்ளைகளை முறையாக வளர்க்கும் குடும்பம் (2 தீமோ.1:4, 5).

### A family that grows children in the Lord systematically. (2 Tim.1:4,5)

தீமோத்தேயுவைக் குறித்து அப்போஸ்தலனாகிய பவுல் எழுதும்பொழுது, அவருடைய மாயமற்ற விசுவாசத்தையும், தேவவரத்தையும், கிருபைகளையும் பாராட்டி பேசுகிறதை நாம் பார்க்கின்றோம். தன்னால் எபேசு பட்டணத்தில் ஆரம்பிக்கப்பட்ட பட்டண திருச்சபையை தீமோத்தேயுவை நம்பி பவுலால் கொடுக்க முடிந்தது என்றால், தீமோத்தேயுவின் ஆவிக்குரிய தரத்தை அவர் நன்றாக அறிந்திருந்தார். அது திடீரென ஒருநாளில் வரவில்லை. பாட்டிக்குள்ளும் தாய்க்குள்ளும் இருந்த கிறிஸ்தவ பண்புகள் சந்ததிக்கு கடத்தப்பட்டதை இங்கே வாசிக்கின்றோம்.

நம்முடைய பிள்ளைகள் நல்ல கல்விபெற்று, சமுதாயத்தின் உயர்ந்த பொறுப்புகளில் கண்டிப்பாக வர வேண்டும். ஆனால், அதைவிட பிரதானமானது நம்முடைய பிள்ளைகள் கர்த்தருக்கு பிரியமானவர்களாய், சத்தியத்தின்படி

நடக்கின்றவர்களாய் இருப்பது மிகமிக பிரதானமானது. ஆகவே,

- பிள்ளைகளை வேதவசன ஒழுங்கின்படி வளருங்கள்.
- ஜெபிக்கவும், வசனத்தை தியானிக்கவும் கற்றுக்கொடுங்கள்.
- ஊழியர்களையும், திருச்சபை அமைப்பையும் பிரதானப்படுத்த போதியுங்கள்.
- கர்த்தருக்குக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணங்களை விதையுங்கள்.
- எந்த இடத்திலிருந்தாலும், எங்கு பணிசெய்தாலும் தேவநாமத்திற்கு மகிமையை கொண்டு வரவேண்டும் என்பதை ஆழமாக பதிவு செய்யுங்கள்.

இப்படிப்பட்ட குழந்தைகள் எதிர்கால சமுதாயத்திற்கும், திருச்சபைக்கும் ஆசீர்வாதமாய் இருப்பார்கள் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

**5. கர்த்தருக்காக வைராக்கியமாக ஊழியம் செய்கின்ற குடும்பம்** (ரோ.16:3-5).

**A family that serves God vigorously** (Rom.16:3-5)

இந்த வசனங்களில் பிரிஸ்கில்லாள், ஆக்கில்லா என்ற தம்பதிகளைக் குறித்து எழுதப்பட்டிருக்கின்றது. அவர்கள் தேவமனிதர்களைக் குறித்த கரிசனை உடையவர்களாகவும், தேவஊழியங்களுக்கு தங்களை அர்ப்பணித்தவர் களாகவும் காணப்படுகிறார்கள். பலவிதங்களில் அப்போஸ்தலனாகிய பவுலுக்கும் மற்ற ஊழியர்களுக்கும் எல்லா விதங்களிலும் மிகவும் பிரயோஜனமாகவும், ஆறுதலாகவும் இருந்ததுமின்றி, மிஷனரி ஊழியங்களிலும் தங்களை ஈடுபடுத்திக் கொண்டவர்களாய் காணப்பட்டார்கள்.

எல்லா விசுவாசிகளும் வேலையை விட்டுவிட்டு முழுநேர ஊழியத்திற்கு வரவேண்டும் என்று சொல்லவில்லை. கர்த்தர் அழைக்கும்பொழுது அவைகளை செய்யலாம். ஆனால் ஒரு விசுவாசி வெறுமன திருச்சபைக்கு போய்விட்டு வருகின்றவராக இருக்கக் கூடாது. பாரர்வையாளர்களாக அல்ல, பங்குபெறுகிறவர் களாக இருக்கவேண்டும்.

- உங்களுக்கு ஆண்டவர் கொடுத்த ஊழிய பாரங்களையும், கிருபைகளையும் கண்டுபிடியுங்கள்.
- உங்களுக்கு மனநிறைவைக் கொடுக்கிற ஊழியம் எது என்பதை தெரிந்து கொள்ளுங்கள்.
- எதை செய்தால் உங்களால் சிறப்பாக செய்ய முடியும் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.
- ஆண்டவர் ஒவ்வொருவருக்கும் தாலந்துகளைக் கொடுத்திருக்கிறார். தாலந்து இல்லாத குடும்பங்களோ, விசுவாசிகளோ இல்லை.

ஆகவே, உங்களுடைய திருச்சபை போதகரோடு பேசி, இந்த ஆண்டு ஏதாவது ஒரு ஊழியத்தில் உங்களை ஈடுபடுத்திக்கொள்ள தீர்மானம் எடுங்கள். அது திருச்சபையின் வளர்ச்சிக்கும், உங்கள் குடும்ப ஆசீர்வாத்திற்கும் காரணமாக அமையும்.

உதாரணத்திற்காக மேற்கண்ட குடும்பங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. தொடர்ந்து வேதாகம குடும்பங்களை, அவர்களது பண்புகளை, குடும்பமாக உட்கார்ந்து தியானியுங்கள், அவைகளை செயல்படுத்த முயற்சி எடுங்கள். கர்த்தர் உங்களுடைய குடும்பத்தைக் கொண்டு அவருடைய திருச்சபையையும், அவருடைய ராஜ்ஜியத்தையும் கட்டுவராக. கர்த்தருடைய கிருபை உங்களோடிருப்பதாக.



# யோசுவா புஸ்தகம் : Book of Joshua

## புத்தக அறிமுகம்

**Rev. Dr. சாமுவேல் ராஜ் R.**

All India National Director, Global University

பஞ்சாகமம் என்ற அழைக்கப்படும் **'தோரா'**வின் சம்பவத் தொடர்ச்சியை நமக்கு தருவதே யோசுவாவின் புத்தகமாகும். சுமார் கி.மு1405-ல் இஸ்ரவேலர் யோசுவாவின் தலைமையில் கானானுக்குள் படையெடுத்துச் சென்றனர். அதைத் தொடர்ந்துள்ள சுமார் 30 ஆண்டு சரித்திரத்தை இப்புத்தகத்தில் பார்க்கிறோம்.

இஸ்ரவேல் ஜனங்களை மோசே நாற்பது ஆண்டுகளாக வழிநடத்தினான். எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து கர்த்தர் அவர்களை விடுதலையாக்கி, தாம் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு எனும் முற்பிதாக்களுக்கு வாக்குப்பண்ணின தேசத்துக்குக் கொண்டுவந்தார்.

ஆனால் இப்பொழுதோ, மோசே மரித்துப்போனான். அவனது ஊழியக்காரனான யோசுவா இஸ்ரவேல் ஜனங்களை வாக்குத்தத்த தேசமாகிய கானானுக்குள் நடத்திச்செல்லும்படி கட்டளை பெற்றான்.

வேதாகமத்திலுள்ள **யோசுவா முதல் எஸ்தர்** வரையுள்ள 12 புத்தகங்கள் இன்று **'சரித்திர ஆகமங்கள்'** என வகைப்படுத்தப்பட்டுள்ளன. அதில் யோசுவா முதலாவது 'சரித்திரப் புத்தகமாக' வருகிறது. யோசுவா புத்தகம் வேதாகமத்தின் ஆறாவது புத்தகமாகவும் அமைந்துள்ளது. சுமார் 500 ஆண்டு காலங்களுக்கு முன்பே கானான் தேசத்தை உன் சந்ததியாருக்கு சுதந்தரமாகத் தருவேன் என்று கர்த்தர் ஆபிரகாமுக்கு வாக்குபண்ணியிருந்தார். அதன் நிறைவேறுதலை இப்புத்தகத்தில் காண்கிறோம். மோசேயின் மரணத்துக்குப் பின்பு, யோசுவாவின் தலைமையில் இஸ்ரவேலர் யோர்தானைக்கடந்து, கானானுக்குள் பிரவேசித்து, யுத்தம் செய்து ஜெயித்து, அத்தேசத்தை பங்கிட்டுப் பெற்றுக்கொண்ட விபரத்தை யோசுவா புத்தகம் நமக்குத் தருகிறது. யோசுவா புத்தகம் இஸ்ரவேலரது சரித்திரத்தில் ஒரு குறிப்பிட்ட யுகத்தை முடிவுக்குக் கொண்டு வருகிறது. மோசே, யோசுவா ஆகியோரது மரணத்துக்குப்பின்பு இஸ்ரவேலரை கர்த்தரே தலைவராயிருந்து வழிநடத்தினர். ஒரு குறிப்பிட்ட தலைவன் என்றிராமல் அவ்வப்போது தேவன் எழுப்பித் தந்த நியாயாதிபதிகளே இஸ்ரவேலரை அவர்களது பகைஞரிடமிருந்து விடுவித்தனர்.

யோசுவா புத்தகத்தின் கருப்பொருள் வசனமாக 1:6-ஐ எடுத்துக்கொள்ளலாம்: "பலங்கொண்டு திடமனதாயிரு. இந்த ஜனத்தின் பிதாக்களுக்கு நான் கொடுப்பேன் என்று ஆணையிட்ட தேசத்தை நீ இவர்களுக்குப் பங்கிடுவாய்:" யோசுவா புத்தகத்தில் யோசுவாவையும், தேவனாகிய கர்த்தரையுமே பிரதான கதாபாத்திரங்களாக நாம் காண்கிறோம்.

**யோசுவா:** யோசுவா எப்பிராயீம் கோத்திரத்தைச் சார்ந்தவன். யோசுவாவைப் பற்றி சில காரியங்களை இங்கு குறிப்பிடலாம். இவன் மோசேயின் உதவியாளனாகவும், ஊழியக்காரனாகவும் தனது வாலிபப் பருவத்திலிருந்தே பணிசெய்தவன். 'தோரா' என்று அழைக்கப்படும் ஆதியாகமம் முதல் உபாகமம் வரையிலான ஐந்து

புத்தகங்களில் நாம் பார்க்கிறபடி, தங்கள் தேவனாகிய கர்த்தரை விட்டும், தங்களை வழிநடத்திவந்த மோசேயைவிட்டும் இஸ்ரவேல் ஜனங்கள் எண்ணற்ற சந்தர்ப்பங்களில் விலகிச்சென்றபோதும், யோசுவாவோ மோசேயின் சொற்களுக்கு அப்படியே கீழ்படிந்து உண்மையுள்ளவனாயிருந்தான்.

- யாத்திராகமம் 32ம் அதிகாரத்தில் பொன் கன்றுக்குட்டி ஒன்றை செய்து அதற்கு ஆராதனை செய்த காரியத்தில் ஆரோனும் உடன்பட்டிருந்தான். ஆனால் யோசுவாவோ அந்தத் திரிபுக்கொள்கைக்கு உட்படவில்லை.
- கானான் தேசத்தை வேவு பார்த்து வரும்படி அனுப்பப்பட்ட பன்னிரண்டுபேரில் யோசுவாவும், காலேபும் மட்டுமே கர்த்தரை விசுவாசித்து, கானானைச் சுதந்தரிக்க முடியும் என்று உறுதிப்படக் கூறினர் (எண். 14:6-9).
- மோசே மரிக்கும் வேளை வந்தபோது வாக்குத்தத்த தேசத்துக்குள் ஜனங்களை வழிநடத்தும் தலைவனாக, கர்த்தர் யோசுவாவையே தெரிந்துகொண்டார்.

**தேவனாகிய கர்த்தர்:** யோசுவா புத்தகத்தின் முதல் பகுதியில் கானானில் படையெடுத்து, யுத்தம்பண்ணி யோசுவா வெற்றி பெறுவதைப் பார்க்கிறோம். எனினும் உண்மையை உற்றுநோக்கினால், பிரதான போராளி யோசுவா அல்ல. **கர்த்தரே** அவர்களது யுத்த வீரராய் இஸ்ரவேலருக்கு முன்சென்றார். தங்களது யுத்தங்கள் அனைத்தையும் இஸ்ரவேலர் ஆவிக்குரிய யுத்தங்களாகவேப் பார்த்தனர்; அதில் அவர்களது சேனையதிபர் கர்த்தரே!

- கர்த்தருக்கு முன்பாக எரிகோ கோட்டை அதிர்ந்தது.
- கர்த்தரின் யுத்தத்தை நடத்திக்கொண்டிருந்த யோசுவாவுக்கு வெற்றி கிடைக்கும்வரை சூரியனும் சந்திரனும் தரித்து நின்றன.
- ஆறு வருடங்களுக்குள் 31 இராஜாக்களையும், ஆறு ஜாதியரையும் கீழ்படுத்தினார்.

**யோசுவா புத்தகச் சம்பவச் சுருக்கம்:**

யோசுவா புத்தகத்தை இரு பெரும்பிரிவுகளாகப் பகுத்தும் படிக்கலாம்;

**முதல்பகுதி (1-12)**

முதல்பகுதியில் யோசுவா கானானை ஜெயித்த விபரங்களைப் பார்க்கிறோம்.

இவை, 1ம் அதிகாரம் முதல் 12ம் அதிகாரம் வரை தரப்பட்டுள்ளன.

1 முதல் 12 வரையுள்ள சம்பவங்களையும் இருஉட்பிரிவுகளாகப் பகுத்துப் பார்க்கலாம். இப்பகுதியை கானானுக்குள் பிரவேசித்தல் (1-5அதி), மற்றும் கானானைச் சுதந்தரித்தல்; (6-12 அதி) என பகுத்துப் படிக்கலாம்.

**1.கானானுக்குள் பிரவேசித்தல்:- (1-5 அதி)**

தங்களது முற்பிதாக்களுக்கு தேவன் வாக்குத்தத்தம் செய்த கானானுக்குள் இப்பொழுது அவர்கள் பிரவேசிக்க இருக்கிறார்கள். யோசுவா சேனைத்தலைவனாக இஸ்ரவேலரை நடத்த வேண்டியுள்ளது. எனவே அவன் பலங்கொண்டு திடமனதாயிருந்து கர்த்தருக்கு உண்மையாயிருக்க வேண்டுமென அவனைப் பார்த்து தேவன் கட்டளைக் கொடுத்தார் (1:5-8). தாம் அவர்களுக்கு உதவிடும் கர்த்தர் என்பதை தேவன் பலவிதங்களில் செயல்படுத்திக் காட்டினார். அதன் முதல் செயலாக, யோர்தான் நதியின் தண்ணீரைக் குவியலாக நிற்கச்செய்து, இஸ்ரவேலர் தண்ணீரற்ற உலர்ந்த தரைவழியாய்க் கடந்து போனார்கள் (3:17). இவர்களது

பெற்றோர் எகிப்தைவிட்டுப் புறப்பட்டபோது செங்கடலை இரண்டாகப்பிரித்து எகிப்தியரின் சேனைகளுக்கும் அவர்களது கடவுள்களுக்கும் தப்பிவரச்செய்த தேவன், இன்றும் உங்களையும் பாதுகாப்பேன் என்பதற்கு நிரூபணமாக அற்புதத்தையும் தேவன் செய்தார்.

கானான் தேசத்துக்குள் அவர்கள் பிரவேசித்து, விருத்தசேதன உடன்படிக்கைக்கு உட்படாத இந்த சந்ததி முழுமைக்கும் விருத்தசேதனம் செய்து, கானான் தேசத்தில் அங்குள்ள பலனைப் புசித்தார்கள். மறுநாளே, கடந்த நாற்பது ஆண்டுகாலமாக தினந்தோறும் வானத்திலிருந்து பொழிந்த மன்னாவும் நின்றுபோயிற்று. எத்தனை அற்புதமானது தேவனுடைய வழிநடத்துதல்!

அன்று, உருவினப்பட்டயத்துடன் நின்றிருந்த "கர்த்தருடைய சேனையின் அதிபதியை" யோசுவா தரிசித்தான் (5:13-15). அவர் யாரென விபரமறியாத யோசுவா, "நீர் எங்களைச் சார்ந்தவரோ, எங்கள் சத்துருக்களை சார்ந்தவரோ என்று கேட்டான்". அதற்கு அவர் "அல்ல, நான் கர்த்தருடைய சேனையின் அதிபதியாய் இப்பொழுது வந்தேன் என்றார்" (5:14). கர்த்தர் ஒருபக்கம் சார்ந்து மற்றவர்களுக்கு எதிர்த்து நிற்கிறவரல்ல என்பதை இங்கு நாம் காண்கிறோம். மனிதர்களாகிய நாம்தான், நாம் யார் பக்கம் சார்ந்துள்ளோம் என்பதை உணர்ந்தறிய வேண்டும்.

**2.கானானை ஜெயித்து சுதந்தரித்தல்:- (6-12 அதி)**

கர்த்தர் இஸ்ரவேலுக்கு வெற்றிமேல் வெற்றியை வரப்பண்ணினார்; அதன் முதல் வெற்றி எரிகோவில் கிடைத்த வெற்றியாகும். இஸ்ரவேல் கானானுக்குள் பிரவேசித்து முன்னேறிச் செல்கையில் பலவித மக்களை நாம் காண முடிகிறது:

- ராகாப், கிபியோனியர் போன்றோர்; இஸ்ரவேலரின் தேவனை ஏற்றுக்கொண்டு இஸ்ரவேலருடன் இணைந்தனர்.
- இஸ்ரவேலரின் தேவனை நிராகரித்து அவர்களை எதிர்த்துவந்த 31 இராஜாக்களும், அவர்கள் கூட்டமனைத்தும் முறியடிக்கப்பட்டனர்.
- இஸ்ரவேலின் பரிசுத்த தேவனுக்கு முன்பாக பொருளாசையில் திருடனாய் மாறிய ஆகான் மிகப்பயங்கரமான முடிவை சந்தித்தான் (7 அதி).

**இரண்டாம் பகுதி (13-24 அதி)**

கானானியரின் மார்க்கம் சீரழிந்த, ஒழுக்கநிலையற்ற, வேசித்தனத்துக்குப் பேர்போன விக்கிரக ஆராதனைகளைக் கொண்டது. அவர்களை நியாயந்தீர்ப்பதும் இஸ்ரவேலருக்கு மீட்பைத் தருவதும், கானானில் யோசுவாவைக்கொண்டு செய்த யுத்தங்களின் பின்னணியம் என்பதை நாம் விளங்கிக்கொள்வது அவசியம்.

இப்பகுதியையும் இரண்டு உட்பிரிவுகளாகப் பகுத்துப் படிக்கலாம்.

**1.இஸ்ரவேல் கோத்திரத்திற்கு சுதந்தரமாகத் தேசத்தைப் பங்கிடுதல் (13 - 22 அதி)**

நூற்றுக்கணக்கான வருடங்களுக்கு முன்பே, கானான் தேசத்தை ஆபிரகாமின் சந்ததிக்குத் தருவேன் என்று தேவன் வாக்கருளினார். இப்பொழுது அவர்கள் இஸ்ரவேலர் என்னும் பெயரில் பன்னிரண்டு கோத்திரங்களை உள்ளடக்கிய ஒரு தேசமாகவே உருவேற்படுத்தியிருந்தார். ஒவ்வொரு கோத்திரத்தினரும் தங்களுடைய பங்கைப் பெற்றனர்.

ரூபன், காத் மற்றும் மனாசேயின் பாதி கோத்திரத்தாருக்கு ஏற்கனவே யோர்தான் நதிக்கு கிழக்கே பங்குப் பிரித்துக் கொடுக்கப்பட்டாயிற்று. மீதமுள்ள

ஒன்பதரைக் கோத்திரத்தாரில் லேவியர் நீங்கலாகி, யோர்தான் நதிக்கு மேற்கேயுள்ள கானான் தேசத்தில் தங்கள் தங்கள் பங்கைப் பெற்றனர். லேவியருக்கு மாத்திரம் சுதந்தரம் தரப்படவில்லை. இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் அவர்களுக்குச் சொன்னபடியே அவருடைய தகனபலிகள் அவர்களுடைய பங்கு. கர்த்தர் அவர்களுக்குச் சொல்லியிருக்கிறபடி அவரே அவர்களுடைய சுதந்தரம், (13:14,33).

**2.இஸ்ரவேலருக்கு யோசுவாவின் கட்டளை (23-24,25)**

மோசே தான் மரிப்பதற்கு முன்பு யோசுவா வழிநடத்திச் செல்லவிருந்த இஸ்ரவேல் சந்ததியினரைப் பார்த்து, "தேவன் கொடுத்த நியாயப்பிரமாணங்களைக் கைக்கொண்டால் உங்களுக்கு அவருடைய ஆசீர்வாதங்கள் அனைத்தும் கிடைக்கும்; மாறாக, கீழ்படியாமல் சென்றால் சிறையிருப்பு என்ற நாடுகடத்தப் படுகிறத் தண்டனையைப் பெறுவீர்கள். எனவே தேவனுக்கு கீழ்படிந்து, அவருடைய பிரமாணங்களைக் கைக்கொள்ளுங்கள்" என்று சொல்லியிருந்தான். இவற்றை உபாகமப் புத்தகத்தில் நாம் பார்க்கிறோம். இப்பொழுது, யோசுவா வயது முதிர்ந்து, மரணமடையும் காலத்துக்கு வந்துவிட்டான். மோசே தனது அந்திய காலத்தில் ஜனங்களுக்குச் சொன்னதுபோலவே, இஸ்ரவேல் சந்ததியினருக்கு யோசுவாவும் கட்டளை கொடுக்கிறான்.

புதிய சந்ததியினரைக் கூடிவரச்செய்து அவர்களுக்கு யோசுவா சொன்னதாவது: உங்கள் முற்பிதாவாகிய ஆபிரகாமின் பூர்வ தேசமாகிய மெசப்பொத்தோமியா தேசத்தின் தெய்வங்களையும், நீங்கள் இப்பொழுது குடியேறியுள்ள கானானியரின் தெய்வங்களையும் பின்பற்றி நீங்கள் சென்றுவிடும் அபாயமிருக்கிறது. அப்படிச்செய்யாமல் உங்களை எந்நாளும் நடத்திவரும் யெகோவா தேவனையேப் பின்பற்றுங்கள், "**நானும் என் வீட்டாருமோவென்றால் கர்த்தரையே சேவிப்போம்**" என்றான். நாங்கள் அப்படியே செய்வோம் என்று ஜனங்கள் யோசுவாவுக்கு வாக்குக்கொடுத்தார்கள் (24:15-18).

யோசுவாவின் புத்தகம் தேவனுடைய பிள்ளைகளுக்கு **புதிய ஆரம்பங்களைத்** தருகிற புத்தகமாகும். நாற்பது ஆண்டுகள் வனாந்திர அலைச்சல்களுக்குப்பின்பு, பரலோக ஆசீர்வாதங்களை கானானில் அனுபவித்தார்கள் என்றே கூறவேண்டும்.

இன்றும் விசுவாசிகளாகிய நம்மில் ஏராளம்பேருக்கு புதிய ஆரம்பங்கள் அவசியமே. இஸ்ரவேலர் கானான் தேசத்தில் அனுபவித்த அனைத்து ஆசீர்வாதங்களாலும் நம்மை ஆசீர்வதிக்க தேவன் விரும்புகிறார். யோசுவா நமது ஆண்டவராகிய இயேசுவுக்கு முன்னடையாளம். நம்மை வெற்றியின் பாதையில் நடத்திச்சென்று அவரது ஆச்சரியமான சுதந்தரத்தில் நாம் பங்கடைய வேண்டுமென அவர் எதிர்பார்க்கிறார். எபேசியர் 1:3-ல் நாம் வாசிக்கிறபடி தேவன் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார். ஆனால் நாமோ தோல்வியின் வாழ்க்கையில், சாத்தானால் தோற்கடிக்கப்பட்ட ஏழைகள்போல வாழுகிறோம். அந்நிலை தவிர்த்து, இயேசுவைப் பற்றிக்கொண்டு வேதபிரமாணங்களைக் கைக்கொண்டு வாழ தேவன் கிருபை தருவாராக!

யோசுவாவுக்கு இஸ்ரவேலர் கொடுத்த வாக்குறுதி (24:15-18) எவ்வளவு காலம் நிலைத்திருந்தது? யோசுவாவின் மரணம் வரைக்குமா? அதன்பின்பு என்ன நடந்தது? போன்ற கேள்விகளுக்கெல்லாம் பதிலை அடுத்து வரும் நியாயாதிபதிகளின் புத்தகத்தில் காணலாம்.



# மகிமைக்கென்று சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம்
# மகிமை உன்மேல் காணப்படும்


## Sis. கெட்சியாள் மோகன்

President, Women's Fellowship Department


ஏசாயா 60:1,2-ல் கர்த்தருடைய மகிமை உன்மேல் உதித்தது என்றும், அவருடைய மகிமை உன்மேல் காணப்படும் என்றும் வாசிக்கிறோம். மகிமை என்றால் என்ன? தேவனை மகிமைப்படுத்துவது என்பது தேவனை கனப்படுத்துவது ஆகும். ஆனால் இங்கு தேவ மக்களாகிய நம்மேல் கர்த்தருடைய மகிமை உதித்தது என்றும் இனியும் அவருடைய மகிமை நம்மேல் காணப்படும் என்றும் வாசிக்கிறோம். நான் என் மகிமைக்கென்று சிருஷ்டித்து உருவாக்கிப் படைத்து, என் நாமந்தரிக்கப்பட்ட யாவரையும் கொண்டுவா என்பேன் என்று ஏசாயா 43:7-ல் வாசிக்கிறோம். தேவன் தம்முடைய மகிமைக்கென்று நம்மை சிருஷ்டித்து, உருவாக்கிப் படைத்திருக்கிறார். தேவன் தம்முடைய மகிமையை நம்மேல் விளங்கப்பண்ணுவது அவருடைய சிருஷ்டிப்பின் நோக்கங்களில் ஒன்றாகும். நாம் அவருடைய மகிமையைப்பெற்று அதை விளங்கப்பண்ணுவது நம்மைக் குறித்த அவருடைய சித்தமாயிருக்கிறது.

**மகிமை என்பது தேவனுடைய**

- பிரசன்னம்,
- குணாதிசயம்,
- கிருபை (தயை) ஆகும்

**1. பிரசன்னம்**

பிரசன்னம் அல்லது தேவ சமுகம் தேவன் நமக்களித்திருக்கும் வாக்குத்தத்தமாகும். யாத் 33:14ல் “என் சமுகம் உனக்கு முன்பாகச் செல்லும்” என்று தேவன் வாக்களித்திருக்கிறார். தேவ சமுகம் நம்மோடிருக்க நாம் ஜெபிக்கிறவர்களாக காணப்பட வேண்டும். அப்படி ஜெபித்து, தேவ சமுகத்தில் நம்மைக் காத்துக் கொள்ளும்போது ஏராளமான ஆசீர்வாதங்கள் நமக்கும் கிடைக்கும். மகிமையும் கனமும் அவர் சமுகத்தில் இருக்கிறது; வல்லமையும் மகிழ்ச்சியும் அவர் ஸ்தலத்தில் இருக்கிறது, என்று 1 நாளா.16:27ல் வாசிக்கிறோம். தேவ சமுகத்தில் பரிபூரண ஆனந்தமும், நித்திய பேரின்பமும் இருக்கின்றது. சங். 6:11 மகிழ்ச்சி மாத்திரமல்ல, பரிபூரண ஆனந்தமும் நித்திய பேரின்பமும் நமக்கு கிடைக்கின்றது. இவ்வுலகில் வேறெங்கும் இதைப் பெற முடியாது. இவ்வுலகம் கொடுக்கும் சந்தோஷம் அநித்தியமானவைகள். சில மணி நேரங்கள் மாத்திரமே. ஆனால் தேவ பிரசன்னத்தில் பரிபூரணமாய், நித்திய காலமாய் இருக்கக்கூடிய பேரின்பம் நமக்கு கிடைக்கிறதாயிருக்கிறது. மனுஷருடைய அகங்காரத்துக்கு அவர்களை உமது சமுகத்தின் மறைவிலே மறைத்து என்று சங்.31:20-ல் பார்க்கிறோம், கொடூர மனுஷர்களின் பார்வைக்கு நம்மை தப்புவிக்கிற இடம் தேவ சமுகமாகும். அவருடைய சமுகத்தின் தூதனானவர் அவர்களை இரட்சித்தார் என்று ஏசாயா 63:9ல் வாசிக்கிறோம். அவருடைய பிரசன்னத்தில் “தூதருடைய சேவை” நமக்கு கிடைக்கின்றது. நாம் நெருக்கப்படும் போதும், உபத்திரவப்படும் போதும் அவருடைய தூதர்கள் நம்மை இரட்சிக்கிறார்கள் (அ) காப்பாற்றுகிறார்கள்.

**2. குணாதிசயங்கள்**

மகிமை என்பது தேவனுடைய குணாதிசயங்களையும் குறிக்கின்றது.

“தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார். அவர்களை மகிமைப்படுத்தியுமிருக்கிறார் என்று ரோமர் 8:29, 30-ல் வாசிக்கிறோம். கிறிஸ்துவின்

நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும் வரைக்கும்" என்று எபேசி. 4:11-13ல் வாசிக்கிறோம். இவை அனைத்தும் கிறிஸ்துவின் குணாதிசயங்களை குறிப்பிடுகின்றது. கிறிஸ்துவின் சாயலாகிய அவருடைய குணம் நமக்குள் உருவாகி, பூரணமடைய தேவன் எதிர்பார்த்திருக்கிறார். முந்தின ஆதாமினால் நாம் இழந்து போன தேவ மகிமையாகிய தேவ சாயலை, இரண்டாம் ஆதாமாகிய இயேசுகிறிஸ்து நமக்களிக்கிறார். 2 பேது.1:4ல் "திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும் பொருட்டு மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் நமக்கு அளிக்கப் பட்டிருக்கிறது" என்று அப்போஸ்தலனாகிய பேதுரு எழுதுகிறார். எனவே இந்த தெய்வீக சுபாவத்தை நாம் பெற்று அதில் பூரணமடையவே தேவன் நம்மை முன்னறிந்து அழைத்திருக்கிறார். எனவே நாம் நம்முடைய மாம்ச கிரியைகளை விட்டு விட்டு நம்முடைய மனம் புதிதாகிறதினாலே தெய்வீக சுபாவத்தைப் பெற்றுக் கொள்வோமாக. அதினால் இராஜா நம்மேல் பிரியப்படுவார் (சங்.45:11,13).

### 3. கிருபை

பழைய ஏற்பாட்டில் கிருபை என்ற வார்த்தை "தயை" என்றும் சில இடங்களில் அலங்காரம், அழகு, சௌந்தரியம் என்றும் குறிப்பிடப்படிருக்கின்றது. "கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய் நமக்குள்ளே வாசம் பண்ணினார்" என்று யோவான் 1:14ல் பார்க்கிறோம். கிருபையினால் நிறைந்த இயேசுவானவர் தம்முடைய மிகுந்த கிருபையினால் இலவசமாய் நமக்கு பாவ மன்னிப்பாகிய மீட்பை தந்திருக்கிறார். தெய்வீக சுபாவத்தை தந்திருக்கிறார்.. நித்திய ஜீவனை வாக்குப்பண்ணியிருக்கிறார். நாம் நிற்பதும் நிர்மூலமாகாதிருப்பதும் அவருடைய கிருபையே அவர் கிருபையை நம்மேல் அளவில்லாமல் பொழிந்து நம்மைக் காத்துக் கொள்கிறார். கர்த்தருடைய கிருபையை போக்கடிக்காமல் தாழ்மையோடிருந்து மிகுந்த ஜாக்கிரதையோடு பற்றிக் கொள்ளக்கடவோம். ஏனென்றால் தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நின்று தாழ்மையுள்ளவர்களுக்குக் கிருபையளிக்கிறார் (1பேது5:5).

இப்படி தேவ மகிமையினால் நாம் நிறைந்திருக்கும்போது, நம்மில் உதிக்கிற ஒளியினிடத்திற்கு இராஜாக்கள் கடந்து வருவார்கள்.. ஆளுகையிலிருப்பவர்கள், தேவ பிள்ளைகளாகிய நம்மிடத்திற்கு வந்து நம் தேவனை சேவிப்பார்கள் (ஏசா.60:3) அப்பொழுது நம்முடைய இருதயம் அதிசயப்பட்டுப்பூரிக்கும்.

அவர்கள் கர்த்தர் தம்முடைய மகிமைக்கென்று நாட்டின நீதியின் விருட்சங்களென்னப்படுவார்கள் (ஏசாயா.61:3). தேவன் நம்மை அவருடைய மகிமைக்கென்று ஊழியம் செய்பவர்களாக நாட்டியிருக்கிறார். 6ஆம் வசனத்தில் கர்த்தருடைய ஆசாரியரென்றும், தேவனுடைய பணிவிடைக்காரரென்றும், நாம் அழைக்கப்படுவதை நாம் காண்கிறோம். கர்த்தர் நமக்கு தந்திருக்கும் ஊழியம் சிறியதோ, பெரியதோ முழு மனதோடு அதை உண்மையும், உத்தமுமாய் செய்யும்படி அவர் எதிர்பார்க்கிறார். அப்பொழுது நம்முடைய வெட்கத்திற்கு பதிலாக இரண்டத்தனையாய் பலன் வரும் (ஏசாயா 61:7). தேவமகிமை நம்மேல் உண்டாகி நாம் நிறைவாய் ஆசீர்வதிக்கப்படுவோம்.

"அந்நியரின் புத்திரர் உன் மதில்களைக் கட்டி, அவர்களுடைய இராஜாக்கள் உன்னைச் சேவிப்பார்கள். என் கடுங்கோபத்தினால் உன்னை அடித்தேன். ஆனாலும் என் கிருபையினால் உனக்கு இரங்கினேன். (ஏசாயா 60:10) என்று ஆண்டவர் கூறுகிறார். தேவ கோபத்தினால் பெருந்தொற்றும், இயற்கை சீற்றமும், பேரழிவும் உண்டாகி மிகுந்த கஷ்டத்திற்கும் மன உளைச்சலுக்கும் நாம் ஆளாகி இருந்தாலும், கிருபை மிகுந்த தேவன் நமக்கு இரங்குவேன் என்று வாக்கு பண்ணியிருக்கிறார். நாம் அனுபவித்த சகல தீங்கையும் தேவன் மாற்றி நம்முடைய மகிமையை நம்மேல் உதிக்கப் பண்ணுவார்"



# எத்தனை தரம் மன்னிக்க வேண்டும்?

**Rev. J. தேவதாசன் கலையரசன்**
Senior Pastor, Bethel AG Church, Kolathur

பேதுரு கேட்ட கேள்விகள் அனைத்துமே அவரது தனிப்பட்ட கேள்விகள் என்று எடுத்துக் கொள்ளக் கூடாது. அவர் கேட்ட பெரும்பாலான கேள்விகள், இன்று வரை நமக்குள் எழும்பும் கேள்விகள் தான். எங்களுக்கு என்ன கிடைக்கும்? என்று கேட்ட கேள்வியை பாருங்கள் (மத்.19:27). அதே கேள்வியை நாமும் கேட்கிறோம் தானே?.

மத்தேயு 18-ம் அதிகாரத்தில் எழுதப்பட்டுள்ள பேதுருவின் மற்றொரு முக்கியமான கேள்வியும் அந்த ரகத்தைச் சார்ந்தது தான். ஆண்டவரே என் சகோதரன் (சகோதரி) எனக்கு விரோதமாய்க் குற்றஞ் செய்து வந்தால் நான் எத்தனை தரம் மன்னிக்க வேண்டும்? ஏழுதர மட்டுமோ என்று கேட்டான் (மத்.18:21).

யூத ரபிமார்கள் மூன்று முறை மன்னித்தால் போதும் என்கிறார்கள். நான் வேண்டுமானால் 7 முறை மன்னித்து விடட்டுமா? என்று கேட்டான். ஏதோ ஓரிருமுறை எனக்கு விரோதமாய் குற்றம் செய்தால் பரவாயில்லை. எப்போதுமே எனக்கு விரோதமாக குற்றம் செய்து கொண்டேயிருந்தால் நான் என்ன செய்யட்டும்?

நம்மோடு கூட பயணிக்கும் சபையின் சகோதர சகோதரிகள், குடும்ப உடன் பிறப்புகள் தொடர்ந்தேர்ச்சையாய், வெறுப்பு கொள்ளுமளவு, கோபமூட்டும் அளவு நமக்கு விரோதமாக தீமை செய்து கொண்டேயிருந்தால் என்ன செய்வது? நமக்குள்ளும் அதே கேள்விதானே வருகிறது. வேதாகமத்திலும் ஏதாவது ஒரு எண்ணிக்கை கணக்கு சொல்லப்பட்டிருந்தால் பல்லைக்கடித்துக் கொண்டு அதைக் கடைப்பிடித்து அவர்களை மன்னித்து விடலாமே? ஆனால் இயேசுவோ ஏழெழுபது தரமட்டும் என்று சொல்லி பேதுருவை பிரமிக்கச் செய்துவிட்டார். அப்படியானால் 7x7=490 தடவை என்று கணக்குப் பார்த்து, சம்மந்தப்பட்டவர்களின் உறவை முடித்துவிடலாமா? முறித்துவிடலாமா? (ஒரு சிலர் அது 7x70=490 அல்ல 70+7=77 என்பதுமுண்டு).

நம்மூரில் சில சமயம் பிறரை கடிந்து கொண்டு உன்னிடம் 19தடவை சொல்லிவிட்டேன் புரியவில்லையா? என்பதுண்டு. அதன் அர்த்தம், எண்ணி 19 தடவை அல்ல, எண்ணிக்கையில் அடங்காத அளவு என்று பொருள். அதைப் போலவே ஏழு எழுபது தரமட்டும் என்பது எத்தனை முறை உனக்கு விரோதமாக தவறு செய்திருந்தாலும், அத்தனை முறையும் மன்னித்துவிடு என்பது தான் அர்த்தம். இது சாத்தியமா? என்ற கேள்வி நமக்குள் இருக்கிறது. பேதுருவுக்குள்ளும் இருந்திருக்கும்.

இந்தப் பின்னணியில் தான் பிறரை மன்னிப்பதின் அவசியத்தை ஒரு உவமை மூலம் தமது சீஷர்களுக்கு கற்றுக் கொடுத்தார். இந்த குறிப்பிட்ட உவமையில் பதினாயிரம் தாலந்து கடன், 100 வெள்ளிப்பணம் கடன் என்றெல்லாம் சொல்லப்பட்டிருப்பது ஏன்? எந்த ஒரு ஆழமான சத்தியத்தையும் பணத்தை வைத்து உதாரணப்படுத்தி பேசினால் பாமரனும் புரிந்து கொள்வான். எனவே தான்,

இயேசுகிறிஸ்து பணத்தை மையமாக கொண்டு மட்டும் 14 உவமைகள் கூறியிருக்கிறார். அதில் முக்கியமான ஒன்று, 18ம் அதிகாரத்தில் கூறப்பட்டுள்ள **மன்னிக்க இயலாத வேலைக்காரன்** உவமை ஆகும்.

## 1.கதைச் சுருக்கம்:

பரலோக ராஜ்யம் தன் ஊழியரிடத்தில் கணக்குப் பார்க்க வேண்டும் என்றிருந்த ஒரு ராஜாவிற்கு ஒப்பாயிருக்கிறது. ராஜா கணக்குப் பார்க்கத் தொடங்கினபோது பிரச்சனை ஆரம்பமாயிற்று. 10,000 தாலந்து கடன்பட்ட ஒருவன் அதனை கட்டித் தீர்க்க நிர்வாக மற்றிருந்தபடியால் அவனை ராஜாவிடம் அழைத்து வந்தார்கள். ராஜா அவனையும் அவன் பெண் ஜாதி பிள்ளைகளையும் விற்று கடனைத் தீர்க்கும்படி கட்டளையிட்டார் (ரோம சட்டத்தின்படி கடனை தீர்க்க இயலாதவர்களுக்கு கொடுக்கப்படும் உச்சபட்ச தண்டனைதான் அது). அவன் மன்னிப்பு கோரினபோது ராஜா மனமிரங்கி, மன்னித்து முழுமையாக கடனை தள்ளுபடி செய்துவிட்டார். விடுதலை பெற்று வீடு திரும்புகையில் தன்னிடம் 100 வெள்ளி பணம் கடன்பட்ட மற்றொருவனுக்கு, கடனை கட்டித்தீர்க்குமட்டும் தான் பெற வேண்டியதாயிருந்த அதே தண்டனையை கொடுத்து கொடுமைப்படுத்தினான். அதைக் கேள்விப்பட்ட ராஜா அவனை மீண்டும் அழைத்து, நான் உனக்கு மன்னித்தது போல அவனுக்கும் மன்னித்திருக்க வேண்டுமல்லவா என்று சொல்லி கோபமடைந்தார். மீண்டும் மன்னிப்பை ரத்து செய்து அதே பழைய தண்டனையைக் கொடுத்தார் (மத்.18:21-35).

## 2.உவமையின் நோக்கமும் படிப்பினைகளும்:

1. மன்னிப்பின் மேன்மையை உணர்த்துவதும், பிறரை மன்னிக்கத் தூண்டும் போதனைக் குறிப்புகளை கொடுப்பதுமே இந்த உவமை கூறப்பட்டுள்ள நோக்கமாகும்.
2. இயேசு கிறிஸ்துவினால் பெரிய அளவில் மன்னிப்பை பெற்ற நாம், நமக்கு எதிரான பிறர் செய்யும் சிறிய அளவிலான குற்றங்களை மனப்பூர்வமாய் மன்னிக்க வேண்டும்.
3. நீங்களும் அவனவன் தன்தன் சகோதரன் செய்த தப்பிதங்களை மனப்பூர்வமாய் மன்னியாமல் போனால், என் பரம பிதாவும் உங்களுக்கு இப்படியே செய்வார். அதாவது மன்னிப்பு ரத்து செய்யப்பட்டு மீண்டும் கடனுக்குரிய தண்டனை கொடுக்கப்படும் (மத்.18:35) என்ற எச்சரிப்பும் இந்த உவமையின் மூலம் கொடுக்கப்பட்டுள்ளது.
4. 10,000 தாலந்து என்பது சாதாரண தொகையல்ல, ஆசரிப்புக் கூடாரமே 29 தாலந்து தங்கத்தால் தான் கட்டப்பட்டது (யாத்.38:24). சாலமோன் கட்ட இருந்த விலையுயர்ந்த ஆலயத்திற்கு தாவீது கொடுத்தது 3000 தாலந்து தங்கமும், 7000 தாலந்து வெள்ளியுமே தான் (1நாளா 29:45). ஒரு வேத ஆசிரியர் 10,000 தாலந்து என்பதை ஒரு புரிதலுக்காக 50கோடி என்றும் 100 வெள்ளி பணம் 5000 ரூபாய் என்றும் சொல்கிறார்.

- மொத்தத்தில் திருப்பிச் செலுத்த இயலாத பெரும் கடன் தான் 10,000 தாலந்து,
- நாமும் நமது முந்தய பாவத்தைப் பொருத்தமட்டில், திருப்பிச் செலுத்த முடியாத பாவ சுமை உள்ளவர்கள், தண்டனைக்குரியவர்கள் தானே?

- நம்மை கிருபையாக மன்னித்ததுடன், நமது கடன்களையும் ரத்து செய்துவிட்டார். அப்படியிருக்க நமக்கு விரோதமாக மனிதர் செய்யும் குற்றங்களை மன்னிக்க வேண்டியது கட்டாயமல்லவா!

**3. மன்னிக்கும் தேவ சுபாவத்தில் வளர்க்கிறீர்களா?**

1. நமது முயற்சியினாலோ, மதக்கடமைகளினாலோ தீர்க்க முடியாத நமது கடன்களை நம் மீதுள்ள மிகுந்த அன்பினால் மன்னித்தார் (ரோமர் 5:8).
2. எவர்களுக்கு அதிகம் மன்னிக்கப்பட்டிருக்கிறதோ அவர்கள் அந்தளவு அதிகமாக அன்பு கூறுகிறார்கள் (லூக்கா 7:42-47).
3. எந்தளவு கிறிஸ்துவின் மன்னிப்பை ஆழமாக உணர்கிறீர்களோ அந்தளவு கிறிஸ்துவை நேசிப்பீர்கள். உன்னை நேசிப்பது போல பிறனையும் நேசிக்கும் கட்டளையை எப்போது நிறைவேற்றுவீர்கள்? அவர்கள் குற்றங்களை பாராமல் அவர்களை நேசிக்கும் போதுதான். அப்போதுதான் அவர்களை மன்னிக்க முடியும் (மத். 22:37-40).

**4. யோசேப்பு சகோதரர்களை மன்னித்ததற்கு காரணம் என்ன?**

1. பழைய பகையை மறந்தான் (ஆதி. 50:19).
2. சகோதரர்கள் செய்த தீமை, வெகு நன்மைக்கானது என்று எடுத்துக் கொண்டான் (ஆதி. 50:20-21).
3. அவர்கள் மேல் வைத்திருந்த அன்பு தான் பிரதான காரணம் (ஆதி. 50:17).

**5. அறிய வேண்டிய வேத வசனங்கள்**

1. ஒருவரை ஒருவர் மன்னியுங்கள் (எபே. 4:32).
2. பிறரை மன்னிக்கும்போது, பிதா உங்களுக்கும் மன்னிப்பைத் தருவார் (மத். 6:14).
3. பிறர் மீதுள்ள மனக்குறையை மறந்து மன்னியுங்கள் (கொலோ. 3:13).
4. ஜெபத்திற்கான பதில் வாங்க - மன்னிப்பது அவசியம் (மாற்கு 11:25).

**இறுதியாக...**

எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறது போல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும் (மத்.6:12) என உரிமையுடன் அநுதினமும் ஜெபிக்க வேண்டுமானால், புதிய வருடத்தில் மனுஷ பகையாளியாக ஒருவர்கூட உங்களுக்கு இருக்க வேண்டாம். சத்துருவையும் மன்னித்து நேசியுங்கள். காணிக்கை செலுத்தும் முன் ஒப்புரவாகச் சொன்னாரே! (மத்.5:22-24). எத்தனைமுறை காணிக்கை செலுத்தினீர்கள். எத்தனைமுறை திருவிருந்து எடுத்திருக்கிறீர்கள். அப்படியிருக்க ஒரு சிலருடன் மட்டும் பேசாமல் இருப்பது, ஒதுங்கியிருப்பது, வெறுப்பது, உதாசினம் செய்வது நியாயமா! மன்னிப்போம் மறப்போம். கிறிஸ்துவின் சாயல் அணிந்து கொள்ளுங்கள். புத்தாண்டில் எந்த சூழ்நிலைகள் மாறினாலும், கர்த்தருடைய மகிமையான ஆசீர்வாதம் உங்கள் மேல் இருக்கும்.



# நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்!

Rev. J. செல்வின் வில்சன்
மேய்ப்பர், சீயோன் ஏ.ஜி.சபை, திருநெல்வேலி

இதை வாசிக்கிற வாசகரே உங்களுக்கும், முழு குடும்பத்தாருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள்.

தமது தாசனாகிய மோசே மூலம் 430 ஆண்டு கால எகிப்தின் கொடும் அடிமைத்தனத்திலிருந்து அற்புத அடையாளங்கள் மூலம் விடுவிக்கப்பட்டு, வனாந்திர பாதை வழியே நடந்தாலும், வாக்களிக்கப்பட்ட பாலும் தேனும் ஓடுகிற கானான் தேசத்தை நோக்கி வீறுநடைபோடுகிற இஸ்ரவேல் மக்களுக்கு, தான் யார் என்று பூலோக ஜனங்களெல்லாம் அறிந்துகொள்ளும்படி வந்த தேவ வார்த்தை **“சகல ஜனங்களைப் பார்க்கிலும், நீ ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய்...” "You will be blessed more than any other people"** (உபா.7:14).

பஞ்சாகமங்களில், உபாகமம் தேவனுடைய உத்தரவாதத்தை விளக்கும் புத்தகமாகும். நிறைய வாக்குத்தத்தங்களை உபாகமத்தில் கர்த்தர் தந்துள்ளார். அவைகளில் சில...

## 1. நீங்கள் பாக்கியவான்கள்!

“இஸ்ரவேலே நீ பாக்கியவான்; கர்த்தரால் இரட்சிக்கப்பட்ட ஜனமே உனக்கு ஒப்பானவன் யார்?...” (உபா.33:29).

**நிகரற்ற மக்களாய்** நாம் உலகில் பிரகாசிக்கவே, இயேசு தம் மாசற்ற இரத்தம் சிந்தி மரித்துயிர்த்து நம்மை மீட்டெடுக்க ஒரு மனிதராய் இவ்வுலகில் வந்து பிறந்தார்.

தமது முப்பதாவது வயதில் தேவ வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து அவர் மூழ்கி ஞானஸ்நானம் பெற்று சீஷர்களைத் தெரிந்தெடுத்து மூன்றரை ஆண்டுகள் ஜனங்களுக்கு தேவ ராஜ்யத்தின் மேன்மைகளின் சத்தியத்தைப் போதித்தார். அநேக சீஷர்களை உருவாக்கினார். பலத்த அற்புதங்கள் அதிசயங்களைச் செய்தார். நோயுற்றோரை சுகமாக்கினார். ஊனமுற்றோரை ஆசீர்வதித்து முழுமையாக்கினார். பிசாசின் பிடியில் சிக்கியோரை, அவர்கள் கட்டுகளிலிருந்து விடுதலையாக்கினார். நாமும் அவரது அடிச்சுவடுகளைப் பின்பற்ற. தாமே நல்மாதிரியாய் வாழ்ந்துகாட்டினார்.

இறுதியாக. தாம் இவ்வுலகில் பிரவேசித்ததின் மேலான நோக்கத்தை நிறைவேற்ற நம்முடைய பாவங்கள், அக்கிரமங்களைத் தம்மேல் ஏற்றுக்கொண்டு, நமக்குப் பதில் ஆளாக, கொடூர சிலுவையில் மரித்தார். மூன்றாம் நாள் மரணத்தை வென்று உயிர்த்தெழுந்தார்.

என்றும் நம்மோடிருக்க, நம்மைச் சாட்சியாக முன்நிறுத்த வல்லவராம் தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியானவரை, வாக்களித்தபடி நமக்குத் தந்திருக்கிறார்.

இந்தச் சத்தியங்களையெல்லாம் மெய்யாக வெளிப்படுத்தும் வண்ணமாக, தூய வேதாகமத்தையும் நமக்குத் தந்தார் (சங்.119:1-4).

கடந்த காலங்களில் நம் ஜெபங்களில், வேதவாசிப்பில். அவரது கிருபையைச் சார்ந்து வாழ்தலில், திருச்சபைக் கூடிவருதலில், ஊழியம் செய்கின்றதில் குறைகள், தாழ்ச்சிகள் ஏற்பட்டிருந்தாலும், இப்போதே திருந்தி புதுவாழ்வை ஆரம்பிக்க, நம்மை முழுமையாய் அர்ப்பணிப்போம். நீங்கள் பாக்கியவான்கள், பாக்கியவதிகள் (சங்.1:1-3).

## 2. நீங்கள் பிழைக்கும்படி கீழ்ப்படிகிற பிள்ளைகள்

“நான் ஜீவனையும் மரணத்தையும், ஆசீர்வாதத்தையும் சாபத்தையும் உனக்கு முன் வைத்தேன். ஆகையால் நீயும் உன் சந்ததியும் பிழைக்கும்படி, நீ ஜீவனைத் தெரிந்துகொள்...” என்றார் (உபா.30:19).

இவ்வுலகில் இன்று 780 கோடி மக்கள் வாழ்ந்தாலும், கர்த்தரால் தெரிந்துகொள்ளப்பட்டிருக்கிற, அவரை ஏற்றுக்கொண்டு சத்தியத்தைக் கைக்கொள்ளுகிற, அவரது ஆலயத்தை, அவரது ஊழியர்களைக் கனம்பண்ணுகிற, உண்மையும் உத்தமமுமாய் நடக்கிற இரட்சிக்கப்பட்டோரே ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். அவரை நாம் உண்டாக்கவில்லை. நம்மை உண்டாக்கின அவரே இன்றும் நம்மை அன்புடன் ஆண்டு நடத்துகிறவர்.

எனவே நம்மை நித்தியத்துக்கு நேரே வழிநடத்தும் கர்த்தருக்கு, நல்பாதையைக் காட்டும் திருவசனத்துக்கு, அவரைக் கனப்படுத்தத்தூண்டும் திருச்சபைக்கு, அவரது வாயாகச் செயல்படும் தேவ ஊழியர்களுக்கு, நமக்குப் பொறுப்பாளர்களாக இருக்கின்ற பெற்றோருக்குக் கீழ்ப்படிகிற பிள்ளைகளாய் என்றும் நாம் நடந்துகொள்வோம். கீழ்ப்படிதலினால் நாம் நிச்சயமாகவே ஆசீர்வதிக்கப்படுவோம்.

தன் அழைப்பிலிருந்து சற்றே தடுமாறிய சவுல் ராஜாவிடம், ஆசாரியனான சாமுவேல் சொன்னான். “...பலியைப் பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப் பார்க்கிலும் செவிகொடுத்தலும் உத்தமம்” (1 சாமுவேல் 15:22). உத்தமமாய் நடப்பவர்களே பத்திரமாய் நடக்கக்கூடும்.

## 3. ஆசீர்வதிக்கப்பட்டோரின் உன்னத வாழ்வு

**I.பாலும் தேனும் ஓடுகிற தேசத்தை** (சபையை, வீட்டை, ஆவிக்குரிய எல்லைகளைத் தருகிறார்). குறைவுள்ள உலகில், ஒரு மனம் நிறைந்த வாழ்வை அவரே நமக்குத் தரக்கூடும்.

பாலும் தேனும் என்றால், அது எல்லாவற்றிலும் நிறைவையும், முழுமையையும், செழிப்பையும், உன்னத அனுபவத்தையும், இனிமையையும் குறிக்கிறது (உபா.11:8,9).

### II. தீர்க்காயுளைத் தருகிறார்

“... கர்த்தர் உங்கள் பிதாக்களுக்குக் கொடுப்பேன் என்று... ஆணையிட்ட தேசத்தில் உங்கள் நாட்களும், உங்கள் பிள்ளைகளின் நாட்களும் பூமியின்மேல் வானம் இருக்கும் நாட்களைப்போல அநேகமாயிருக்கும்படி...” {என் வார்த்தைகளை கனம்பண்ணுங்கள் என்றார்} (உபா. 11:18-21).

“உனக்கு நன்மை உண்டாயிருப்பதற்கும் பூமியிலே உன் வாழ்நாள் நீடித்திருப்பதற்கும் உன் தகப்பனையும், தாயையும் கனம்பண்ணுவாயாக என்பதே **வாக்குத்தத்தமுள்ள முதலாம் கற்பனையாயிருக்கிறது**'' என்றார் பவுல் (எபே.6:1-3). வேத வசனத்தை மீறி நடந்த ஆதாமும் ஏவாளும்

குற்றவாளிகளானதுபோல், இன்றும் வசனத்தை மீறி நடப்போர் எவரும் ஆசீர்வாதங்களை, நித்திய ஜீவனாகிய ஆயுளை, வாழ்வின் முழுமையை இழந்துபோவதைக் கண்கூடாகக் காண்கிறோம் (எபே.6:1-3; சங்.91:16; 92:15).

### 4. ஆசீர்வதிக்கப்பட்டவர்கள், வீணான நிந்தைகளுக்குப் பயப்பட அவசியமில்லை

அமெரிக்காவின் புகழ்மிக்க ஜனாதிபதிகளுள் ஆபிரகாம் லிங்கன் முதன்மையானவர். தேவபக்தியுள்ளவர்.

அவர் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டு, மக்களவையில் தனது முதலாவது கன்னி உரையை நிகழ்த்தியபோது, அவருக்குப் பலத்த கைதட்டல்களும், பாராட்டுகளும் குவிந்தன.

அவர்மேல் எரிச்சலாயிருந்த ஒரு உறுப்பினர் எழுந்து "Mr.லிங்கன், பாராட்டுகளில் நிறைய மகிழ்ந்துவிடாதீர்கள். உங்கள் அப்பா தைத்த காலணிகள்தான் என் கால்களில் கிடக்கின்றன" என, அவரை இழிவுப்படுத்தி அவமதிக்கும் வண்ணம் சொன்னார்.

லிங்கன் இதனால் அதிர்ச்சியடையவில்லை, சோர்ந்துபோகவில்லை. அவர் சொன்னார் : "நண்பரே எனது தந்தை மரித்து எவ்வளவோ காலமாயிற்று, அவர் தைத்தது இன்னும் உங்கள் கால்களில் கிடந்து உழைக்கிறதென்றால், அவரது தொழிற்திறமையைப் பாருங்கள்..! மட்டுமல்ல, இப்போதுகூட உங்கள் காலணி கிழிந்தால், அதை என்னிடம் தாருங்கள். நான் பழுதுநீக்கி தருகிறேன்". இகழ்ச்சியை நம் கர்த்தர் புகழ்ச்சியாக மாற்ற ஞானமும் கிருபையும் தருவார். நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்.

அன்று, எதிரி வாயடைத்துப்போனார், சபை கரம் தட்டி மகிழ்ந்தது.

ஆம், வாசகரே, **நாம் தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களானதால்,** "நாம் தீமையினால் வெல்லப்படாமல் தீமையை நன்மையினால் வெல்லுவோம்" (ரோமர் 12:21). உத்தமனுக்குக் கர்த்தர் துணை (2நாளா.19:11).

### 5. ஆசீர்வதிக்கப்பட்டவர்களுக்கு தோல்வியில்லை

பவுல் சொன்னார்: "கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் எங்களை வெற்றி சிறக்கப்பண்ணி, எல்லா இடங்களிலேயும், எங்களைக் கொண்டு அவரை அறிகிற அறிவின் வாசனையை வெளிப்படுத்துகிற தேவனுக்கு ஸ்தோத்திரம்" (2 கொரி. 2:14). ஆம், பொறுமையுடன் பல தீமைகளை சகிக்கிற, தாழ்மையுடன் நடந்துகொள்கிற, மன்னிக்கிற, உன்னதப் பண்புகளை வெளிப்படுத்துகின்ற நமக்கு, எதுவும் தோல்வியே இல்லை.

யோசேப்பு தோற்றதுபோல் தெரிந்தாலும், வெகுஜனங்களை அவன் உயிரோடு காக்கும்படியாக தேவன் அதனை நன்மையாக முடியப்பண்ணினார் அல்லவா! (ஆதி.45:5). அன்றியும் அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம் (ரோமர் 8:28). பெரும் போராட்டங்கள் கூட நிச்சயமாய் நன்மையாகவே முடியும்.

தமது குமாரன் கிறிஸ்து மூலமாய் நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம். நாம் என்றுமே ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்.



# வருடத்தின் துவக்கமுதல் முடிவுமட்டும் நடத்துகிற தேவன்

Rev. V.J. பாலஸ்

தலைமைப் போதகர், சிமிர்னா A.G. சபை, வண்ணாரப்பேட்டை

பரிபூரண ஜீவன் வாசகர்களுக்கு இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் புதுவருட வாழ்த்துக்கள்!

உபாகமம் 11:11-15

நீங்கள் சுதந்தரிக்கப்போகிற தேசமோ, மலைகளும் பள்ளத்தாக்குகளுமுள்ள தேசம்; அது வானத்தின் மழைத் தண்ணீரைக் குடிக்கும் தேசம்; அது உன் தேவனாகிய கர்த்தர் விசாரிக்கிற தேசம், வருஷத்தின் துவக்கமுதல் வருஷத்தின் முடிவுமட்டும் எப்பொழுதும் உன் தேவனாகிய கர்த்தரின் கண்கள் அதின்மேல் வைக்கப்பட்டிருக்கும். நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தரிடத்தில் உங்கள் முழு இருதயத்தோடும் உங்கள் முழு ஆத்துமாவோடும் அன்புகூர்ந்து, அவரைச் சேவிக்கும்படி, நான் இன்று உங்களுக்குக் கற்பிக்கிற என் கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்தால், நீ உன் தானியத்தையும் உன் திராட்சரசத்தையும் உன் எண்ணெயையும் சேர்க்கும்படிக்கு, நான் ஏற்றகாலத்தில் உங்கள் தேசத்தில் முன்மாரியையும் பின்மாரியையும் பெய்யப்பண்ணி, மிருகஜீவன்களுக்காக உன் வெளிகளிலே புல் முளைக்கும்படி செய்வேன், நீ சாப்பிட்டுத் திருப்தியடைவாய் என்கிறார்.

வருஷத்தின் துவக்கமுதல் முடிவுவரைக்கும் தேவன் தம்முடைய கண்களை நம்மேல் வைத்திருக்கிறார். ஒவ்வொரு நாளும் தேவன் நம்மை பாதுகாத்து வழிநடத்துகிறார். சாத்தான் பலவிதமான தீமையான காரியங்களை நமக்கு விரோதமாக கொண்டுவந்தாலும் கர்த்தர் நம்மோடு இருந்து இந்த வருஷத்தின் ஆரம்பமுதல் முடிவுவரைக்கும் நம்மை வழிநடத்துகிறார்.

தேவன் நம்மேல் வைத்த திட்டங்களை நிறைவேற்ற விரும்புகிறார். இந்த புதிய வருஷத்திலே நம்மைக்குறித்து தேவனுக்கு ஒரு திட்டம் இருக்கிறது. ஆகவே இந்த திட்டம் நிறைவேற வேண்டுமானால் நாம் தேவனுடைய வார்த்தைகளுக்கு கீழ்படிய வேண்டும். ஒவ்வொரு நாளும் அவருடைய சத்தத்தைக் கவனமாய் கேட்கவேண்டும். இந்த வருஷத்தில் யாத்திராகமம் 15:26 நானே உன் பரிகாரியாகிய கர்த்தர் என்ற வசனத்தின் மூலமாக தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. இந்த வருடத்தின் ஒவ்வொரு நாளும் கர்த்தரே உங்களுக்கு பரிகாரியாக இருக்கிறார். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு காரியத்திலும் கர்த்தரை நம்ப வேண்டும் அவர் வியாதிக்கு மட்டுமல்ல சகல தேவைகளுக்கும் அவர் பரிகாரியாக இருக்கிறார். கடந்த வருடங்களிலே பயங்கரமான கொள்ளை நோய் அதிகமானபேரை பலியாக கொண்டுபோய்விட்டது எத்தனையோ கிறிஸ்தவர்கள் ஊழியர்கள் மரித்திருக்கிறார்கள். இந்த பயங்கரமான காலங்களிலே தேவன் நம்மை விஷேசமாக பாதுகாத்து வந்திருக்கிறார். இன்னும் புதிய தொற்று வருகிறதாக சொல்லுகிறார்கள். ஆனாலும் தேவனுடைய பிள்ளைகள் பயப்படவேண்டிய அவசியமில்லை. எவ்வளவு பயங்கரமான வியாதி கொள்ளை நோய் வந்தாலும் தேவன் நம்மோடு இருக்கிறார். வாதை உன் கூடாரத்தை அணுகாது. அவரே நமக்கு பரிகாரியாயிருக்கிறார். அவர் எப்பொழுது நமக்கு பரிகாரியாக இருப்பாரென்றால் இந்த வேதத்திலுள்ள எல்லா சத்தியங்களையும் எல்லா கட்டளைகளையும் எல்லா நியமங்களையும் கைக்கொண்டால் அவர் நமக்கு பரிகாரியாயிருக்கிறார். ஒவ்வொரு காரியத்திலும் நம்முடைய தேவனை நம்பவேண்டும். புற ஜாதிகள் விக்கிரகங்களை நம்பியிருக்கிறார்கள் ஆனால் நாம் ஆராதிக்கிற தேவன் சர்வ வல்லமையுள்ள தேவன். அவரால் கூடாதகாரியம் ஒன்றுமில்லை. நமக்கு என்ன தேவை என்ன பிரச்சனைகள் வந்தாலும் நாம் கர்த்தரையே நம்பி அவரை சார்ந்திருக்க வேண்டும்.

இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாகி கானானுக்கு நேராக சென்றார்கள். அப்பொழுது மோசே தேவனை நோக்கி: உம்முடைய கண்களில் எனக்குக் கிருபை கிடைப்பதற்கும், உம்முடைய வழியை எனக்கு அறிவியும்; என்று விண்ணப்பம் பண்ணினான். கர்த்தர் அவனிடம் என் சமுகம் உனக்கு முன்னாலே செல்லும் என்று சொன்னார். (யாத்.33:13,14). ஏசாயா 52:12-ல் உள்ள வசனத்தின்படி இந்த புதிய வருடத்திலே தேவனுடைய சமுகம் நமக்கு முன்னும் பின்னுமாக இருந்து வழி நடத்தும். இப்படிப்பட்ட ஒரு தேவன் நம்மோடு இருக்கிறார். இஸ்ரவேல் ஜனங்களை பகலில் மேகஸ்தம்பத்தினாலும் இரவில் அக்கினி ஸ்தம்பத்தினாலும் வழிநடத்தினார். எவ்வளவோ பயங்கரமான தடைகள் வந்தபோதிலும் சோதனைகள் வந்தபோதிலும் கர்த்தரே அவர்களுக்கு பரிகாரியாக இருந்து வழிநடத்தினார். 40 வருடம் தேவன் தம்முடைய ஜனங்களை மிகவும் அற்புதமாக வழிநடத்தினார். 40 வருடம் அவர்களுக்கு வானத்திலிருந்து மன்னாவைக் கொடுத்தார். கன்மலையின் தண்ணீரை அவர்களுக்கு குடிக்கக்கொடுத்தார். ஆகவே இவ்விதமாக 40 வருடம் அவர்களை வழிநடத்தி அவர்களுக்கு பரிகாரியாக இருந்தார். இந்த புதிய வருடத்திலே அவரே நமக்கும் பரிகாரியாக இருப்பார். ஆகவே சாத்தானுடைய எந்தவிதமான கிரியைகளும் நம்மை அணுக முடியாது. வியாதிகள் வேதனைகள் பலவிதமான கொள்ளை நோய்கள், வாதைகள் வந்து நம்மைத்தாக்க முடியாது. அவர் வருஷத்தை நன்மையினால் முடிசூட்டுகிறார். தம்முடைய ஆலயத்திலே வந்து தேவனை ஆராதிக்கிற தேவனுடைய பிள்ளைகளை தேவனுடைய வீட்டிலே உண்டாகும் நன்மையினால் திருப்தியாக்குகிறார் (சங்கீதம் 65:4,11).

உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு நன்மையை வழங்காதிரார் (சங்கீதம் 84:11) . இந்த புதிய வருடத்திலே ஆண்டவர் நம்மை புதிய நன்மையினாலே திருப்தியாக்குகிறார். சங்கீதம் 34:10 கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கு ஒரு நன்மையும் குறைவுபடாது. ஆகவே தேவனுடைய பிள்ளைகள் எல்லாவிதமான நன்மைகளினாலும் திருப்தியடைவதற்கு உத்தமமாய் வாழவும் அவரை அனுதினமும் தேடவும் நம்மை ஒப்புக்கொடுக்க வேண்டும். குறிப்பாக சபைகூடுதலை விட்டுவிடக்கூடாது. ஆராதனையை தவறவிடக்கூடாது. ஆராதனையை விட்டுவிட்டு வேறே காரியங்களை நீங்கள் செய்யும்போது உங்களுக்கு வரவேண்டிய ஆசீர்வாதம் தடைபடுகிறது. தேவனுடைய சபையில் வந்து தேவனுடைய வார்த்தைகளைக் கேட்காவிட்டால் அந்த வாரத்திலே கிடைக்க வேண்டிய ஆசீர்வாதங்களை நாம் இழந்து போகவேண்டிவரும்.

யோவான் 5:2-14 வசனங்களில் 38 வருடமாக வியாதிகொண்டிருந்த மனிதன் பெதஸ்தா குளத்தண்டை இருந்தபோது இயேசு கிறிஸ்து அவனை சொஸ்தமாக்க வேண்டும் என்று அங்கே வந்தார். வந்து சொஸ்தமாகவேண்டும் என்று விரும்புகிறாயா என்று கேட்டபொழுது ஆண்டவரே எனக்கு உதவி செய்ய ஒருவரும் இல்லை என்று சொன்னான். இயேசு அவனை நோக்கி உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நட என்றார். அவன் நடந்தான். அவன் ஆலயத்திற்கு நேராக நடந்தான் அவனைத் திரும்ப ஆலயத்திலே பார்த்து நீ சொஸ்தமானாய் அதிக கேடானதொன்றும் வராதபடி நீ இனி பாவம் செய்யாதே என்றார். ஆகவே இயேசு கிறிஸ்து அவனுடைய பாவங்களையும் மன்னித்தார். அவனுடைய நோய்களையும் குணமாக்கினார். பழைய வருடத்திலே எத்தனையோ உலகப்பிரகாரமான காரியங்கள் உங்களை மேற்கொண்டிருக்கலாம், உங்களை அடிமையாக்கிக் கொண்டிருக்கலாம். இந்த புதிய வருடத்திலே இனி நான் அந்த பாவத்தை செய்யமாட்டேன் என்று தீர்மானம் செய்யுங்கள். பழைய புளித்தமாவோடு அல்ல புதிய வருடத்திலே துப்புரவு உண்மை என்கிற புளிப்பில்லாத அப்பத்தோடு பண்டிகையை நாம் ஆசரிக்க வேண்டும். எந்த பாவத்திலே நீங்கள் அடிமைப்பட்டிருக்கிறீர்களோ எந்த பாவம் உங்களைத் தொடர்ந்து கொண்டிருக்கிறதோ அதிலிருந்து முற்றிலும் வேறுபட்டு வரும்போது கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார். அவர் முன்னும் பின்னும் ஆண்டவர் நம்மோடு இருந்து இந்த வருடத்தின் ஆரம்பம் முதல் முடிவு வரைக்கும் அவர் நம்மோடு இருந்து நம்மைப் பாதுகாத்து வழிநடத்துவார். ஆமென்.



தமிழ் பிரதேச மிஷனரி இயக்கம்

# தேடும் சிந்தை + தேடும் செயல் =கண்டு மகிழும் பாக்கியம்

**Rev. S. தாமரை செல்வன்**
இயக்குநர், வடமேற்கு மிஷனரி ஊழியங்கள்

TAMIL DISTRICT MISSIONS
India and beyond...

கிறிஸ்துவில் அன்பானவர்களே,

2022 இந்த புத்தாண்டில் உங்கள் யாவருக்கும் மிஷன் பணி துறையிலிருந்து (வட மேற்கு மற்றும் வட கிழக்கு) எங்கள் அன்பான புத்தாண்டு வாழ்த்துக்களை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இந்த எழுப்புதலின் பத்தாண்டில் நிச்சயமாகவே பிதாவாகிய தேவன் இயேசு மூலம் தந்த மீட்பின் நிறைவேறுதல் நம் இந்திய தேசத்திலும் நடைபெறுவதை நாம் காண்போம்.

ஒரு கணக்கெடுப்பில் இந்தியாவில் மொத்த ஜனத்தொகையில் இன்னும் சுவிசேஷத்தினால் சந்திக்கப்படாத 2,554 மக்கள் இனம் இருப்பதில் ஒருமுறை கூட இயேசுவின் அன்பை கேள்விப்படாத 2,289 மக்கள் இனம் இன்னும் இருக்கிறது, அது 94% அளவாகும். சுமார் 2020 ஆண்டுகளுக்கு முன் மீட்பிற்காக இயேசு வந்து ஜீவனை கொடுத்திருந்தும் அதை கேள்விப்படவோ, அறியவோ, அனுபவிக்கவோ இல்லாத இவ்வளவு திரளான ஜனம் நம் இந்திய தேசத்தில் நம் தலைமுறையில் இருக்கிறதே. வெளிச்சத்தை காணாமல் இருளில் அடைபட்டிருக்கும் பட்டணங்கள்... கிராமங்கள்... இருக்கிறதே.

“கர்த்தர் நம் மேல் பிரியமாயிருந்தால், அந்த தேசத்திலே (வட மாநிலங்களிலே ) நம்மைக் கொண்டுபோய், பாலும் தேனும் ஓடுகிற அந்த தேசத்தை (பாரத தேசத்தை ) நமக்குக் கொடுப்பார்.

...கர்த்தர் நம்மோடே இருக்கிறார்...பயப்பட வேண்டியதில்லை - எண் 14 : 8,9.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து (லூக்கா 15 : 1-32) பரிசேயரும் வேதபாரகரும் முறுமுறுத்தபோது சொன்ன உவமையில் மூன்று நிலைகளை குறிப்பிடுகிறார்.

## 1.காணாமல் போன ஒரு ஆடு

ஒரு மேய்ப்பனுக்கு நூறு ஆடுகள் இருக்கையில் ஒன்று **காணாமற் போனால்** தொண்ணூற்றொன்பது ஆடுகளை விட்டு, காணாமற் போன ஆட்டைக் கண்டு பிடிக்குமளவும் தேடித்திரியானோ? என்றார்.

தன்னிடத்தில் இருக்கின்ற, பாதுகாப்பில் இருக்கின்ற, 99 ஆடுகளை விட்டு காணாமற் போன ஒரு ஆட்டைக்குறித்து எத்தனை கரிசனை, எத்தனை ஏக்கம் பாருங்கள். ஒன்றுதானே போனால் போகட்டும். நமக்கு 99 (மிகுதியானது) இருக்கிறதே. இது பரவாயில்லை, இது போதும் என்று இருக்க வில்லை. தன்னை விட்டுபோன, தன்னோடு இல்லாத அந்த ஆட்டைக்குறித்தே அவனுக்கு ஏக்கம்.

நல்ல மேய்ப்பனாகிய இயேசுவுக்கும் தான் காத்தர், தனக்கு பரலோகம் இருக்கிறது. ஏராளமான, தாராளமான தூதர்கள், பரலோக மகிமை, பரலோக ஆராதனை எல்லாம் இருந்தாலும் அதை பெரிதாய் எண்ணாமல் தன்னை விட்டு விட்ட மனுக்குலம் தன்னோடு இல்லாத மனுக்குலத்தையே மனதில் கொண்டு மனுக்குலத்திற்காக தேடிவந்தார். மீட்கும் பொருளாக தன் ஜீவனை சிலுவையில் ஈந்தார்.

நாம் தற்போது எப்படி இருக்கிறோம்? நான் இரட்சிக்கப்பட்டேன், நான் விடுவிக்கப்பட்டேன். நான் ஆசீர்வதிக்கப்பட்டேன், நான் பாதுகாப்பில் இருக்கிறேன். அப்பாடா, இது போதும் என்று இருக்கிறோமா? அல்லது இன்னும் மீட்கப்படாமலிருக்கும் நம் மக்கள் மேல் எண்ணம், கரிசனை, ஏக்கம் இருக்கிறதா?

## 2.காணாமல் போன ஒரு வெள்ளிக்காசு

அந்த வேதபகுதியில் இயேசு தொடர்ந்து சொல்லும்போது ஒரு ஸ்திரீ பத்து வெள்ளிக் காசை உடையவளாயிருந்து அதில் ஒரு வெள்ளிக்காசு **காணாமற் போனால்...** அதை ஜாக்கிரதையாய் தேடாமலிருப்பாளோ?

மற்ற 9 வெள்ளிக்காசு தன்னிடமே இருந்தாலும் தன்னை விட்டு போன தன்னுடைய காணாமற்போன ஒரு வெள்ளிக்காசின் மேல் எத்தனை எண்ணம்? எத்தனை ஏக்கம்?

## 3.தகப்பனை விட்டுப்போன இளைய மகன்

தன் தகப்பனிடம் தன் பங்கை கேட்டு வாங்கி தகப்பனை விட்டு துன்மார்க்கமாக வாழ்ந்து செல்வத்தை எல்லாம் இழந்து பன்றி மேய்க்கையில் பன்றிகள் தின்கிற தவிட்டினாலே தன் வயிற்றை நிரப்ப ஆசையாய் இருந்தும் ஒருவனும் அவனுக்கு கொடுக்காத அவலநிலை.

தரித்திரம்...வறுமை ....பசி....

தகப்பனோ எப்போது என்னை விட்டுபோன இளைய மகன் என்னிடம் வருவான் எப்போது என்னிடம் வருவான்? என்கின்ற ஏக்கம் பாருங்கள். மூத்த மகன் தன்னோடு இருக்கிறான். இவன் தவறு செய்தான் தொலையட்டும் என்று இருக்கவில்லை.

நம்மிடம் இருக்கிறவைகளுக்காக சந்தோஷம்தான். வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் நமக்கு கிடைத்த மீட்பு, தேவனோடு உள்ள உறவு, ஆசீர்வாதங்கள், நிச்சயம், தெளிவு இல்லாமல் இருக்கும் நம் குடும்பத்தினர், நம் உறவினர், நம் நண்பர்கள், நமக்கு அறிமுகமானவர்கள், நமக்கு அறிமுகமில்லாதவர்கள் எவ்வளவு எவ்வளவு மக்கள் இருக்கிறார்கள். அவர்களை குறித்த எண்ணம், ஏக்கம்,பாரம்,தவிப்பு நமக்கு இருக்கிறதா?

## நம் ஜனங்களுக்கு

1. நல்ல மேய்ப்பன் இயேசு தங்கள் வாழ்வில் இல்லாததால்...
   - தொய்ந்து போன நிலை.
   - சிதறடிக்கப்பட்ட நிலை.
   - பலவிதங்களில் காயப்பட்ட, பாதிக்கப்பட்ட நிலை.
   - மறுமையின் நம்பிக்கையில்லாமலே இயேசு இல்லாமலே... மரிக்கும் நிலை.

2. கவனம் இல்லாததால்...
   - காணாமல் போன நிலை
   - கேட்பாரற்ற நிலை
   - பயனில்லாத நிலை
   - மதிப்பு இழந்த நிலை

3. சிற்றின்ப மோகத்தால்...
   - தேவ சாயல், தேவனோடு உறவு இல்லா வாழ்வு.
   - பரிசுத்தமில்லா, அலங்கோலமான வாழ்வு.
   - தோல்வி,கசப்பு, வெறுப்பு, தற்கொலை எண்ணங்கள் நிறைந்த துன்பவாழ்வு.

- இதன் தொடர்ச்சி 27-ம் பக்கம் பார்க்க



# எழுப்புதல் தாமதம் ஏன்?


**Rev. J. சாமுவேல் ஜெபராஜ்**

மண்டல தலைமைப்போதகர், திருநெல்வேலி


எழுப்புதலை விரும்பாத எவரும் ஆவிக்குரிய வட்டாரத்தில் இல்லை என சொல்லலாம். எழுப்புதலுக்காக பல கட்ட ஜெபங்கள் தீவிரமான முயற்சிகளை பலர் முன்னெடுத்து செய்வதையும் காணலாம். ஆனால் என்னமோ எழுப்புதல் வந்தபாடில்லை. ஏதோ ஒரு சில இடங்களில் தேவ கிரியை அதிகமாக காணப்படுகிறது. அற்பதங்கள் நடைபெறுகிறது. திரளான ஜனங்கள் இரட்சிக்கப்படுகிறார்கள். ஆனால் அது நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிற எழுப்புதல் அல்ல.

எனவே எழுப்புதல் தாமதத்திற்கான காரணத்தை அறிந்துகொள்ள ஆவியானவர் நமக்கு உதவி செய்வாராக.

**1.ஒருமனமின்மை:** அப்.2:1

அவர்கள் (அப்போஸ்தலர்கள் ஊழியர்கள், விசுவாசிகள்;) ஒருமனப்பட்டு ஒரு இடத்தில் கூடி இருந்தார்கள். எழுப்புதலுக்கு மிக மிக முக்கியமான ஒன்று ஒருமனம், ஆனால் இன்று ஊழியர்கள், விசுவாசிகள் ஒன்றாக கூடுகிறார்கள்; ஆனால் ஒருமனமாய் காணப்படுகிறார்களா என்றால், அது சந்தேகம் தான்.

எத்தனையோ பிரிவினை, கசப்புகள் மாறாமலேயே இருக்கிறது. நேபுகாத்நேச்சார் கண்ட சொப்பனத்தில் பாதம் பாதி இரும்பும், பாதி களிமண்ணும் இணையாமல், அதே நேரத்தில் ஒன்றாய் இருப்பது போல காட்சியளித்தது. அது போல இன்றைய அரசியல் மற்றும் ஆன்மீகத்திலும் அதே சூழ்நிலை காணப்படுகிறது.

சபை என்பது கிறிஸ்துவின் சரீரம். தலை இயேசுவே, சரீரமாகிய சபையில் நாம் ஒவ்வொருவரும் அங்கங்களே. சரீரத்தின் உறுப்புகள் தனித்தனியே செயல்பட முடியாது. எனவே எழுப்புதலை நாம் காணவேண்டுமானால் முதலாவது ஊழியர்கள், விசுவாசிகள் ஒருமனப்பட வேண்டியது மிக அவசியம்

**2. பரிசுத்தமின்மை:**

இன்றைய நாட்களில் பரிசுத்தத்திற்கு பல விளக்கங்கள் கொடுக்கப்பட்டு வருகிறது. ஆனால் தேவன் எதிர்பார்க்கிற பரிசுத்தம் என்பது முற்றிலும் வித்தியாசமானதாக காணப்படுகிறது. ஏசாயா தன்னை மிகவும் பரிசுத்தவானாக நினைத்தான். ஆனால் தேவன் அவனுக்கு அவனை வெளிப்படுத்தினபோதோ தன் அசுத்தத்தை உணர்ந்தான். (ஏசாயா.6:7,8).நம்மை ஆராய்ந்து பார்த்து சுத்திகரிக்கப் பட்டால் மட்டுமே எழுப்புதலை காணமுடியும். தேவன் பாவத்தை காண்பவர் மட்டுமல்ல சுத்திகரிப்பவர். உடனே ஏசாயா சுத்திகரிக்கப்பட்டான்.

பரிசுத்தம் என்பது தேவனுக்கு நான் மறைவாக இல்லை, அவர் எப்பொழுதும் என்னை பார்த்துக் கொண்டிருக்கிறார் என்ற உணர்வே.

பேதுரு கால்களை மட்டுமல்ல என் தலையையும் கழுவும் என கூறினான் (யோவான்.13:9) பின் நாட்களில் அந்த பேதுரு மூலமாகத்தான் எழுப்புதலை தேவன் கொண்டு வந்தார்.

**3. ஆத்தும பாரமின்மை :**

கடமைக்காக நாம் நமக்கு கொடுக்கப்பட்ட ஊழியங்களை செய்ய முடியும். ஆனால் ஆத்ம பாரத்துடன் செய்யும்போது மட்டுமே அறுவடையை காண முடியும். இன்றைய நாட்களில் போட்டி, பொறாமை இதன் அடிப்படையில் ஊழியங்கள் போய் விடுகிறதை காண முடிகிறது. கண்ணீரோடு விதைத்தால் கெம்பீர அறுவடை உண்டு. அது மாத்திரம் அல்ல. ஆத்தும பாரம் உள்ளவர்கள் நிச்சயமாக சுவிசேஷம் ஊழியத்தில் மிகுந்த ஆர்வம் உள்ளவர்களாக காணப்படுவர்.

எழுப்புதலைக் காணவேண்டுமானால் ஜனங்கள் நரகத்திற்கு போகிறார்களே, நித்திய, நித்தியமாக நரகத்தில் வேதனைப்படுவார்களே என்ற சிந்தனையுடன் முழு இருதயத்துடன் செயல்பட்டால் மட்டுமே எழுப்புதலை காணமுடியும்.

இதை வாசிக்கிற அன்புக்குரியவர்களே நாம் வாழுகிற இந்த நாட்களில் ஒரு எழுப்புதலை காணவேண்டுமானால் ஒருமனதோடு தேவன் விரும்புகிற பரிசுத்தத்தோடு ஆத்தும பாரத்தோடு செயல்பட்டால் மட்டுமே எழுப்புதல், இல்லையென்றால் எழுப்புதல் என்பது வெறும் வார்த்தையில் மட்டுமே நின்று விடும்.

**(O Lord Revive Us Again)**

---

....25-ம் பக்கத்தின் தொடர்ச்சி

**இன்றைய கதறல்?**

1. **மேஜையிலிருந்து விழும் துணிக்கை** கிடைக்காதா உயிர் பிழைக்க என்று கெஞ்சும் நிலை.
2. **ஒரு துளி தண்ணீர்** என் நாவைக் குளிரப் பண்ண ஒருவரை அனுப்பக்கூடாதா என்று கெஞ்சும் நிலை.
3. **ஒரு பருக்கைச் சோறு கூட கிடைக்காதா** என பசியினால் தெருக்களில் மூர்ச்சித்துக் கிடக்கும் நிலை.

தேவ அன்பை ருசித்தோரே...
தேவ நன்மையை அனுபவித்தோரே...
தேவ கிருபைகளால் காக்கப்பட்டு வருவோரே...
தேடும் சிந்தை உங்களுக்கு இருக்கிறதா ?
தேடும் செயல் உங்களுக்கு இருக்கிறதா?

**இருந்தால்....கண்டு மகிழும் பாக்கியத்தை தேவன் நிச்சயம் உங்களுக்கு தருவார்.**

**இப்பொழுது செய்ய வேண்டியவைகள்:**

- சந்திக்கப்படாத மக்கள் சந்திக்கப்பட தினமும் ஜெபியுங்கள்.
- வருடத்திற்கு ஒரு முறையாவது மிஷன்பயணம் போய் உங்கள் போதகரின் வழிகாட்டுதலின்படி ஜனங்களை சந்தியுங்கள்.
- முழு நேரமாக மிஷனெரிகளாகவே தங்கள் வாழ்வை அர்ப்பணித்தவர்களின் பணிகளுக்கு மாத உதவிகளை உங்கள் போதகரின் வழிகாட்டுதலின் படி அனுப்புங்கள்.
- வடமேற்கு மிஷனுக்குட்பட்ட 12 மாநிலங்களுக்காக, வடகிழக்கு மிஷனுக்குட்பட்ட 15 மாநிலங்களுக்காக ஜெபிப்போம்...
- மேலும் விபரங்கள் அறிய

1.Rev.S. தாமரை செல்வன் (வடமேற்கு மிஷன் இயக்குநர்) செல் :94439 77272
2.Rev. எட்வின் பிரபாகரன் (வடகிழக்கு மிஷன் இயக்குநர்) செல் : 94439 79441

**நாங்கள் இருக்கிறோம் உங்களுக்கு வழிகாட்ட**

ஜனங்களின் மீட்பை சீக்கிரத்தில் நம் நாட்களில் காணும் பாக்கியத்தை தேவன் நமக்குத் தருவார்.



# பிள்ளை வளர்ப்பு


## Rev. R. நெல்சன் ஞானகுமார்

இயக்குநர், கிறிஸ்துவுக்கு மாணவர் ஊழியங்கள்.
மூத்த போதகர், திருவண்ணாமலை ஏ.ஜி. சர்ச்.


ஒரு குழந்தை 7 வயதாகும்வரை என்னிடம் இருக்கட்டும் அவனுக்கு நான் போதிக்க வேண்டிய எல்லாவற்றையும் கற்றுக் கொடுத்து விடுவேன். அதன்பின் அவன் உலகில் எங்கிருந்தாலும் வாழ் நாள் முழுவதும் நல்ல கிறிஸ்தவனாக இருப்பான் (பிரான்சிஸ் சேவியர்).

### I. பிள்ளைகளை பழக்குவியுங்கள் (Train the child)

பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை நடத்து; அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான் (நீதிமொழிகள் 22:6).

#### 1. சபை ஆராதனையில் நடந்துகொள்ள வேண்டிய ஒழுங்கை கற்றுக்கொடுங்கள்

- ஆலயம் போகும் முன்பே எப்படி நடந்துகொள்ள வேண்டும் என சொல்லிக்கொடுங்கள்.
- சேட்டை பண்ணினால் இனி அப்படி செய்யக்கூடாது என எச்சரியுங்கள்.
- ஒழுங்கீனம் தொடர்ந்தால் வெளியே கூட்டிக் கொண்டுபோய் கண்டிப்புடன் எச்சரியுங்கள்.
- அப்படியும் தொடர்ந்தால் வீட்டிற்கு போய் சாப்பிடுவதற்கு முன் முழங்காலில் நிற்க வைத்து பிரம்பை எடுத்து வெகுமதி கொடுங்கள்.

#### 2. அடுத்த வீட்டிற்கு போகும்போது எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதை கற்றுக்கொடுங்கள்.

- கதவை தட்டி அனுமதி கேட்காமல், திறந்த வீட்டிற்குள் நுழைந்து விடக் கூடாது.
- நீங்கள் வீட்டில் முன் பகுதியில் பேசிக்கொண்டிருக்கும்போது, உங்கள் பிள்ளைகள் முழு வீட்டையும் சுற்றி வந்து, எல்லா பொருட்களையும் கீழே இழுத்துப் போட்டு, சிலதை உடைத்து போட்டு வீட்டை அலங்கோலப்படுத்த அனுமதிக்கக்கூடாது. அந்த வீட்டார் முகம் சுளிக்க நடந்து கொள்ளக்கூடாது. ஒருவேளை உங்கள் முன் ஒன்றும் சொல்ல மாட்டார்கள். நீங்கள் போன பிற்பாடு பேசுவார்கள்.

#### 3. ஜெபிக்க கற்றுக்கொடுங்கள்

காலை எழுந்தவுடன், பள்ளி செல்லும்போது, சாப்பிடும் முன், இரவு தூங்கும் முன் ஜெபிக்க பழக்குங்கள். குடும்ப ஜெபத்தில் தினமும் ஒருவர் ஜெபியுங்கள்.

#### 4. வேதத்தை பயன்படுத்த கற்றுக்கொடுங்கள்

தினமும் வாசிக்க, தினமும் ஒரு வசனம் மனப்பாடம் செய்ய சொல்லுங்கள். வேதாகம கதை சொல்லிக் கொடுங்கள். சபையில் பிரசங்க நேரத்தில் வேறு வேலைகள் செய்யாமல், கவனமாய் கேட்கவும், பிரசங்க குறிப்பு எடுக்கவும் பழக்குங்கள். சபைக்கு செல்லும் போது வேதம், நோட் புக், பேனா எடுத்துச் செல்ல பழக்குங்கள்.

#### 5. தன் வேலைகளை தானே செய்ய பழக்குவியுங்கள்

படுக்கையை மடிக்க, குளிக்க, துவைக்க, சாப்பிட்ட தட்டு கழுவ, புத்தகங்கள் அடுக்கி வைக்க பழக்குங்கள்.

**6. இருக்கிறதில் மன ரம்மியமாய் இருக்க கற்றுக்கொடுங்கள்**

சாப்பாடு, ஆடை, திண்பண்டம், விளையாட்டு பொருள்கள் ஆகியவைகளில் எதை உங்களால் வாங்கிக் கொடுக்க முடியுமோ, அதில் குழந்தைகள் திருப்தியடைய பழக்குங்கள்.

**7. வீட்டில் தாய், தகப்பனுக்கு உதவியாயிருக்க கற்றுக்கொடுங்கள்**

கடைக்கு போக, பாத்திரம் விளக்க, வீட்டை, வாகனத்தை சுத்தம் செய்ய, சமைக்க, செடிகளிருந்தால் தண்ணீர் ஊற்ற, பராமரிக்க கற்றுக்கொடுங்கள்.

**8. நற்பண்புகளை கற்றுக்கொடுங்கள்.**

- சாப்பிடும்போது விரல்களை நக்காமல் இருத்தல்.
- Wastages ஐ சாப்பாட்டு தட்டிலோ அல்லது அதற்கென வைக்கும் தட்டிலோ போட வேண்டும். கண்ட இடத்திலேயும் சிதறக்கூடாது.
- Thank you, Praise the Lord, Sorry, Good morning போன்ற வார்த்தைகளை தாராளமாக சொல்ல கற்றுக்கொடுங்கள்.

**II. பிள்ளைகளோடு நேரம் செலவழியுங்கள்** (உபாகமம் 6:6,7).

1. கொஞ்சுவதற்கு நேரமெடுங்கள்.
2. விளையாட நேரமெடுங்கள்.
3. கேட்கும் கேள்விகளுக்கு பொறுமையாய் பதில் கூறுங்கள்.
4. அவ்வப்போது பூங்கா, ஹோட்டல், சுற்றுலா தலங்கள் போன்ற இடங்களுக்கு அழைத்து செல்லுங்கள்.
5. பாடம் சொல்லிக் கொடுக்க நேரமெடுங்கள்.
6. வசனம் சொல்லிக்கொடுக்க நேரமெடுங்கள்.
7. கதை சொல்ல நேரமெடுங்கள்.
8. பேசுவதற்கு நேரமெடுங்கள்.
9. குடும்ப ஜெபம் பண்ணுவதற்கு நேரமெடுங்கள்.

**III. பிள்ளைகளுக்காக தினமும் ஜெபியுங்கள்** (யோபு 1:5)

1. சுகத்திற்காக, ஆவிக்குரிய வாழ்க்கைக்காக, படிப்புக்காக, பாதுகாப்புக்காக, எதிர்காலத்திற்காக தினமும் ஜெபியுங்கள்.
2. பிள்ளைகள் கேட்கும் வகையில் பிள்ளைகளுக்காக ஜெபியுங்கள்.
3. பிள்ளைகள் தலையில் கை வைத்து ஜெபியுங்கள்.
4. உங்கள் ஜெபம் பிள்ளைகளுக்கு பல ஆபத்துகளிலிருந்து பாதுகாப்பைக் கொடுக்கிறது.

**IV. பிள்ளைகளுக்கு மாதிரியாயிருங்கள்** (தீத்து 2:7, மத்தேயு 18:6, நீதி. 20:7)

1. ஜெபத்தில், வேத வாசிப்பில், சபை ஆராதனையில் கலந்துகொள்வதில், ஊழியம் செய்கிறதில் மாதிரியாயிருங்கள்.
2. பிள்ளைகளை வைத்து ஊழியர்களை குறை கூறி பேசிக்கொண்டிராதிருங்கள்.
3. பிள்ளைகளை வைத்து குடும்ப பிரச்சனைகளை பேசாதிருங்கள்.
4. பிள்ளைகளை வைத்து கணவன் மனைவியும் சண்டை போடாதிருங்கள்.
5. வருமுன் காப்போம்.
6. பிள்ளை வளர்ப்பு ஞானத்திற்காக ஜெபியுங்கள் (நியாயாதிபதிகள் 13:12).

**V. எப்போதும் உற்சாகப்படுத்துங்கள், ஒரு போதும் அதைரியப் படுத்தாதிருங்கள்.**

1. நேர்மறையான வார்த்தைகளை பேசுங்கள்.
2. எதிர்மறையான வார்த்தைகளை தவிர்த்திடுங்கள்.

3. நல்ல காரியம் செய்யும்போது பாராட்டுக்கள்
4. உதவி செய்யும்போது நன்றி சொல்லுங்கள்.
5. நீங்கள் தவறாய் தண்டித்தால் மன்னிப்பு கேளுங்கள்.
6. தோற்கும்போது அதைரியப்படுத்தாதிருங்கள்.
7. வெற்றி பெறும்போதும், சாதனை செய்யும் போதும் வெகுமதி அளியுங்கள்.

## VI. பிள்ளைகளை சீர்திருத்துங்கள்

1. பிரம்பும் கடிந்துகொள்ளுதலும் ஞானத்தைக் கொடுக்கும், தன் இஷ்டத்திற்கு விடப்பட்ட பிள்ளையோ தன் தாய்க்கு வெட்கத்தை உண்டு பண்ணுகிறான் (நீதிமொழிகள் 29:15).
2. பிள்ளையை தண்டியாமல் விடாதே, அவனைப் பிரம்பினால் அடித்தால் அவன் சாகான். நீ பிரம்பினால் அவனை அடிக்கிறதினால் பாதாளத்துக்கு அவன் ஆத்துமாவைத் தப்புவிப்பாயே (நீதிமொழிகள் 23:13,14).
3. தகப்பன் தான் நேசிக்கிற புத்திரனைச் சிட்சிக்கிறதுபோல, கர்த்தரும் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனைச் சிட்சிக்கிறார் (நீதிமொழிகள் 3:12).
4. பிரம்பைக் கையாடாதவன் தன் மகனைப் பகைக்கிறான், அவன்மேல் அன்பாயிருக்கிறவனோ அவனை ஏற்கனவே தண்டிக்கிறான் (நீதி. 13:24).

- அழுது காரியத்தை சாதிக்க இடமளிக்காதிருங்கள்
- தொலைக்காட்சி பார்க்கிற விஷயத்தில் கட்டுப்பாடோடிருங்கள்.
- சாப்பாட்டில் வைக்கப்படுகிற எந்த கூட்டு குழம்புகளையும் வெறுக்காமல் சாப்பிட வையுங்கள்.
- கேட்கிற எல்லாவற்றையும் வாங்கிக்கொடுக்க வேண்டிய அவசியமில்லை.
- பிள்ளைகள் என்ன செய்கிறார்கள், எங்கே போகிறார்கள் என்பது பெற்றோருக்கு தெரிந்திருக்க வேண்டும்.
- 2 வயதுக்கு முன் பிள்ளைகளை அடிப்பது நல்லதல்ல
- 3 வயது முதல் முதலாவது எச்சரியுங்கள். சரியானதை சொல்லிக் கொடுங்கள், பின்பு பிரம்பை கையாளுங்கள்.
- அதிகமாய் கண்டித்து பிள்ளைகளை உடைத்து விடாதிருங்கள். கண்டிக்காமலே விட்டு பிள்ளைகளை கெடுத்து விடாதிருங்கள்.
- எவ்வளவு கண்டிக்கிறீர்களோ அவ்வளவு அன்பு செலுத்துங்கள்.
- உங்கள் பிள்ளைகளை மற்ற பிள்ளைகளோடு ஒப்பிடாதிருங்கள் மற்ற பிள்ளைகள் முன் திட்டாதிருங்கள்.
- எந்த காரியத்தையும் கட்டாயப்படுத்துவதை விட அவர்களாகவே தீர்மானித்து செய்யுமளவிற்கு அவ்விஷயத்தின் நன்மை தீமைகளை கற்றுக்கொடுங்கள்.

## Quotations:

- என் அம்மாவின் ஜெபங்களை நான் நினைவு கூறுகிறேன். அது என்னை எப்போதும் பின் தொடர்கிறது. என் வாழ்க்கை முழுவதும் அது என்னை ஒட்டிக்கொண்டிருக்கிறது (Abraham Lingon).
- என் தேவனே நான் இன்று உம்முடைய பிள்ளையாய் இருப்பது நீர் எனக்கு தந்த நல்ல தாயால் தான் (St. Augustine).
- ஆயிரம் ஆசிரியர்களைப் பார்க்கிறலும் என் அம்மாதான் என் வாழ்க்கையை அதிகமாய் மாற்றியவர் (ஜார்ஜ் ஹெர்பர்ட்).





# வாலிபரே! நீங்கள் பலவான்கள்

**Rev. D. சாலமோன்**
President, Christ Ambassadors

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். கடந்த ஆண்டு முழுவதும் நல்ல நண்பனாக இருந்து நம் எதிர்காலத்திற்கு நம்மை ஆயத்தப்படுத்தி வரும் தேவனுக்கு ஸ்தோத்திரம்.

**வலைத்தளம் சார்ந்த உலகம்**-Internet dependent world:

Internet-ஐ சார்ந்தே வாழும் இன்றைய சமுகத்திற்கு- Electronic appliances and Social media apps, etc... ஆகியவற்றின் உதவியோடுதான் எதிர்காலம் என்ற நிலை கட்டாயமாகிவிட்டது. Internet தேவனால் நமக்கு கொடுக்கப்பட்ட ஓர் ஆசீர்வாதமாகும். தேவனின் படைப்பை சீர்குலைப்பது பிசாசின் திட்டமாகும். அவ்வாறே பிசாசின் தந்திரத்தால் Internet-ஐ அதிகமாக பயன்படுத்தும் இளைஞர்கள், அவசியமில்லாமல் பயன்படுத்தி சிக்குண்டு, அடிமைபட்டு வாழ்கின்றனர்.

இன்றைய வாலிபர்களை புரிந்துக் கொள்ளவும், அவர்களுக்குப் பிரயோஜனமாக சில ஊழியங்களை முன்னெடுக்கவும் 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் AGCA மூலம் மேற்கொள்ளப்பட்ட ஓர் பொதுவான கருத்துக்கணிப்பில் “இன்றைய நமது வாலிபர்கள் போதை, ஆபாசபடம், சமூக வலைத்தளம் ஆகியவற்றில் எதில் அதிகமாக அடிமைப்பட்டு இருக்கிறார்கள்” என்ற கேள்விக்கு: 100க்கு 45 பேர் pornography பார்ப்பதாகவும், அதிலிருந்து கண்டிப்பாக விடுபட விரும்புவதாகவும், ஆனால் முடியவில்லை என்றும் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ஆதிநிலை ஏகும் வாலிபர்கள்:**

ஆதி திருச்சபை வாலிபர்கள் பலவான்களாயிருந்ததினாலும், தேவவசனம் அவர்களில் நிலைத்திருந்ததினாலும் அவர்கள் பொல்லாங்கனை ஜெயித்திருக்கிறார்கள் (1 யோவான் 2:14) இன்றைய காலத்தின் வாலிபர்களும் பொல்லாங்கானாகிய பிசாசையும் அவன் தந்திரங்களையும் முறியடித்து ஜெயமுள்ள வாலிபர்களாக வாழ முடியும்.

**பெலவீனப்படுத்தும் பிசாசின் ஆபாச தூண்டில்:**

சாத்தானால் நாம் மோசம்போகிவிட கூடாது, அவனுடைய தந்திரங்கள் நமக்கு தெரியாதவைகள் அல்லவே (2கொரி 2:11).

Pornography (Pornia-வேசித்தனம்+graphy வரைதல் /எழுதுதல்) இது பாவம் என்று தேவன் எச்சரிக்கிறார். இந்த பாவமானது ஒவ்வொரு தனி நபருக்கும் எதிரானது, தேவனுடைய சபைக்கும் எதிரானது.

**ஆபாசம் (Pornography) குறித்து பரிசுத்த வேதாகமம் கூறுவது:**

- மத்தேயு 5:28, நீதி 24:9 தீய நோக்கம் பாவம்.
- 1கொரி. 6:18 சரீரத்திற்கு விரோதமான பாவம்.
- 1தீமோ. 5:24 பாவம் பின்தொடரும்.
- 1கொரி. 3:16 பாலியல் பாவமானது நம் சரீரமாகிய தேவனுடைய ஆலயத்திற்கு விரோதமானது.

➤ எபே. 5:3 பரிசுத்தவான்களை தகுதி இழந்து போகச் செய்யும்.

➤ நீதி. 6:32 ஆபாசம் ஆத்தும தற்கொலையாகும்.

**ஆபாச தூண்டலின் மிகமுக்கிய உறுப்பு:**

ஆபாசமனது மதுபானத்தை விட மோசமாக ஒருவரை அடிமைப்படுத்தும். குடிக்காவிட்டால் குடிகாரன் கைநடுங்கும்; ஆனால் ஆபாச எண்ணம் எல்லா நேரங்களிலும் ஒருவரை அடிமைப்படுத்தும். ஒருவரின் சரீரத்தில் பாலுணர்வு செயல்களை நடப்பிக்க மிக முக்கிய உறுப்பாக மனித மூளை இருக்கிறது.

தேவன் மனிதனுக்கு உடலில் அரிய பரிசாக கொடுத்த மூளையானது, மனிதனின் சிறந்த செயல் திறனை வெளிப்படுத்துகிறது. மனித மூளையில் Limbic System and Cerebral Cortex என்னும் இருபகுதிகள் உள்ளது.

Limbic System என்பது உள்மூளை ஆகும். மகிழ்ச்சி, பழக்கவழக்கம், கற்கும் திறன், ஊக்கம், பயம், துக்கம், பாலுணர்வு ஆகியவை Limbic Systemத்தோடு தொடர்புடையது.

Cerebral Cortex என்பது வெளி மூளை ஆகும். விழிப்புணர்வு, எண்ணங்கள், சிந்தைகள், தீர்மானம் எடுப்பது ஆகியவை Cerebral Cortex உடன் தொடர்புடையது.

## Designer vs Deceiver

மனிதனுக்கு நன்மையாக அவனை நல்வழியில் மகிழ்விக்க (Joy in legitimate way) சில Hormones (ஹார்மோன்ஸ்) Dopamine, Oxytocin, serotonin, ஆகியவை சுரக்கின்றது. இந்த ஆபாசமானது மனிதனுடைய மூளையில் சுரக்கும் சுரப்பிகளை தேவனுக்கு விரோதமாக மனிதன் செயல்பட அவனைத் தூண்டுகிறது.

**ஆபாசம் ஏற்படுத்தும் பாதிப்புகள்: It affects Spiritually, Emotionally, Physically, Socially, mentally)**

தேவனோடு உள்ள உறவில் பாதிப்பு, ஜெபத்தின் மீது ஆர்வமில்லாமை, வேதவசனத்தின் மீது சமரசம், சந்தேகம், குடும்ப உறவில் பாதிப்பு, பெற்றோருக்கு மறைத்தல், சபைப் பற்று குறைவது, படிப்பில் கவனச் சிதறல், குற்ற உணர்வு, உடல் சோர்வு, மன அழுத்தம், எதிர்கால பயம், துணிகர குற்ற செயல்களில் ஈடுபடுவதாகும்.

**Discover your inner Sanctuary Excerpt from Surfing for God: (Michael John Cusick)**

1. **Choose a sacred word as a symbol of your desire to be present to God** தேவனோடு இருக்க வேண்டும் என்ற உங்கள் விருப்பத்தின் அடையாளமாக தேவனை விவரிக்கும் ஓர் வார்த்தையை வாசிக்கும் வேதப்பகுதியிலிருந்து தேர்ந்தெடுங்கள்.
2. **Sit Comfortably in a quiet place.** அமைதியான இடத்தில் வசதியாக அமர்ந்து தேவனோடு பேசுங்கள். தேவன் நம்மை அதிகமாய் நேசிக்கிறார். தேவனின் அன்பை பரிசுத்த ஆவியானவர் நம்முடைய உள்ளங்களில் ஊற்றுகிறார். ரோமர் 5:5. அவர் நாமம் 'எல்ஷடாய்' -மனிதனின் அனைத்து தேவைகளையும் தேவன் சந்திக்கிறார். **Devil hinders the blessings flow from Elshadai.**
3. **When interrupt by thoughts, sounds or other distractions acknowledge them and gently return your attention to God via the sacred word.** அவ்வாறு ஜெபிக்கும்போது கவனம் சிதறினாலும் பிற தடைகள் குறுக்கிட்டாலும்

அவற்றை ஒப்புக்கொண்டு, ஜெபத்தின் ஆரம்பத்தில் தேவனை குறித்து நீங்கள் சொன்ன வார்த்தை மூலம் மறுபடியும் உங்கள் கவனத்தை ஆண்டவரிடம் திருப்புங்கள்.

**4. At the end of the prayer period remain in silence with your eyes closed for several minutes.** ஜெப நேரத்தின் முடிவில் சில நிமிடங்கள் கண்களை மூடிக்கொண்டு அமைதியாக இருந்து பின்னர் ஆமென் சொல்லுங்கள்.

**ஜெபம்:** ஆண்டவரே உம்முடைய அன்பு பெரியது. என்னை உயிர்ப்பியும், என் கண்களோடு உடன்படிக்கை செய்கிறேன். என் குடும்பத்தாரை எப்படி பார்க்கிறேனோ அப்படியே மற்றவர்களையும் பார்க்க உதவும். ஆபாச பாவங்கள் எனக்கும், என்னை படைத்தவருக்கும் விரோதமான பாவம், இந்த பாவத்தை வெறுக்கிறேன். இந்த பாவச் செயலை விட்டுவிட விரும்புகிறேன். நீர் தரும் பெலத்தால் ஒரு போர் வீரனைப் போல தொடர்ந்து போராடுவேன். ஆமென்.

---

## மருத்துவக் குறிப்பு : தேன்

என் மகனே, தேனைச் சாப்பிடு. இது நல்லது (நீதி.24:13)



தாய்ப்பால் தலைசிறந்தது. அதற்கு இணையானது பசும்பால். இவைகளுக்கு மேலானது தேன். பழம்பெரும் மருத்துவ நூல்கள் இவ்வாறு கூறுகின்றன.

வாதமொரு பித்தம் மாற்றும்
மாந்தமெனும் நோயை விரட்டும்
ஆறுதலென அரும்பசி ருசியூட்டும்
ஆதலினால் இது கொம்புத்தேனே.

தேனில் உள்ள சத்துக்களை இப்போது பார்ப்போம். நீர் 18 சதவீதம், கார்போஹைட்ரேட் 76 சதவீதம், உலோகச் சத்துக்கள் 0.2 சதவீதம், குளுபார்க்வி திரவ பிசின் 0.4 சதவீதம். இதைத்தவிர தேனில் விதவிதமான மலர்களின் சத்தும், சர்க்கரை சத்தும் உள்ளன.

**தேன் பயன்படுத்தினால் தீரும் நோய்கள் :**

தேன் சீரண சக்தியைத்தரும். இரைப்பையில் ஏற்படும் எல்லாவிதக் கோளாறுகளையும் குணமாக்கும். நெஞ்சில் ஏற்படும் வலி, எரிச்சல், பலவீனம் ஆகியவற்றை போக்கும். இரத்தசோகை குணமாக்கும். நரம்புகளுக்கு வலிமைதரும், தோல் சம்பந்தமான நோய்கள் குணமாக்கும். பற்கள், கண்கள் இவைகளுக்கு நல்ல பலன் தரும். உடல் பருமனைக் குறைக்கும். வாத நோய்களைக் குணப்படுத்தும். நஞ்சுகளை முறிக்கும். இரத்தப்போக்கை நிறுத்தும். நீண்ட ஆயுள்தரும். தாது விருத்தி ஏற்படுத்தும். கருப்பை நோய்களை குணமாக்கும்.

**தேனுடன் மற்ற மருந்துகளை கலந்து அருந்துவதால் தீரும் நோய்கள் :**

தேனுடன் குளிர்ந்த நீரை கலந்து அருந்தினால் உடல் பருமன் குறையும். தேனுடன் காய்ச்சின பசும்பாலை இளஞ்சூட்டுடன் கலந்து பருகினால் உடல் வலிமைபெறும். ரோஜா இதழ்களுடன் கற்கண்டு தேன் இவைகளை கலந்து தயாரிக்கும் குல்கந்தை தினசரி சாப்பிட உடல் சூடு தணியும், உலர் திராட்சை பழங்களை தேனில் ஊறவைத்து சாப்பிட உடல் அழகு பெறும். தினசரி இருவேளை தேன் மட்டும் சாப்பிட எல்லாவித காமாலைகள் குணமாகும். உணவுக்கு முன் தேன் சாப்பிட்டு வர குடல் புண்கள் குணமாகும்.

புண்கள் மீது தேனை தடவினால் புண் ஆறிவிடும். சிலந்திக்கட்டிகள் மீது தேன் சுண்ணாம்பு கலந்து பூச கட்டி பழுத்து உடைந்து குணமாகும். 1 வயது வரை குழந்தைகளுக்கு தேன் கொடுக்கக்கூடாது. படுக்கையில் சிறுநீர் கழிக்கும் குழந்தைகளுக்கு தேன் கொடுக்க படுக்கையில் சிறுநீர் கழிப்பது நின்றுவிடும். தேனை அன்னாச்சி பழத்துடன் சாப்பிட சிறுநீரக கோளாறு நீங்கும். நிமோனியா, டைப்பாய்டு போன்ற காய்ச்சல்கள் வரும்போது உணவு மண்டலம் அதிகமாக பாதிக்கப்படுகிறது. இந்நிலையில் தேன் நல்ல உணவு,

P.J.A. அலெக்ஸாண்டர், சென்னை.

---



# கர்த்தரால் ஆசீர்வாதம் பெற்ற சந்ததி

**Rev. பெகின் சாமுவேல்**
(AGCM Director)

கிறிஸ்துவுக்குள் பிரியமான பரிபூரண ஜீவன் வாசகர்களுக்கு இயேசு கிறிஸ்துவின் ஈடு இணையற்ற நாமத்தினால் புத்தாண்டு வாழ்த்துக்களை தமிழ்பிரதேச சிறுவர் ஊழியங்கள் சார்பாக தெரிவித்துக்கொள்கிறேன். தேவன் தம்முடைய தயவினாலும், அளவற்ற கிருபையினாலும் கடந்த வருடத்தில் நமது ஊழியங்களை ஆசீர்வதித்தார். வாக்குரைத்த தேவன் ஒரு சேதமும் அணுகாமல் சிறுபிள்ளைகளை பாதுகாத்து நடத்தினார். தேவனுடைய தயவுள்ள கரம் இந்த ஊழியங்கள் மேல் இருந்ததற்காக தேவனை நன்றியுடன் துதிக்கிறேன்.

இந்த புதிய ஆண்டிலும் சிறுவர் ஊழியங்களுக்கு என்று விசேஷித்த விதமாய் தேவன் அருளும் வாக்குத்தத்தத்திற்காக ஜெபித்தபோது தேவன் கொடுத்த வாக்குத்தத்தம்:

**அவர்கள் கர்த்தரால் ஆசீர்வாதம் பெற்ற சந்ததியென்று அறிந்துகொள்வார்கள் (ஏசாயா 61:9).**

நமது பிள்ளைகள் கர்த்தரால் ஆசீர்வாதம் பெற்றவர்கள் என்று இந்த ஆண்டு எல்லா ஜனங்களும் அறிந்துகொள்ளும்படி கர்த்தர் கிரியை செய்வார். எப்படிப்பட்ட சந்ததி கர்த்தரால் ஆசீர்வாதம் பெறும் என்று இந்த இதழில் நாம் தியானிப்போம்.

### 1.சத்தியத்தில் நடக்கிற சந்ததி

என் பிள்ளைகள் சத்தியத்திலே நடக்கிறார்கள் என்று நான் கேள்விப்படுகிற சந்தோஷத்திலும் அதிகமான சந்தோஷம் எனக்கு இல்லை (3 யோவான் 4).

எட்டு வயதில் ராஜாவான யோசியா தேவனுடைய நியாயப்பிரமாண புஸ்தகத்தில் எழுதப்பட்டிருந்த வார்த்தைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தான். அதில் எழுதப்பட்டிருந்த காரியங்களை அனைவரும் அறிந்துகொள்ள வேண்டும் என்று தன் ராஜ்யத்தில் உள்ள சிறியோர் துவக்கி பெரியோர் மட்டும் ஆலயத்தில் கூடி வரச்செய்து, அவர்கள் அனைவருடைய காதுகள் கேட்க உடன்படிக்கை புஸ்தகத்தின் வார்த்தைகளை வாசித்தான். அவனைப்போலொத்த ராஜா அவனுக்கு முன் இருந்ததுமில்லை. அவனுக்குப்பின் எழும்பினதுமில்லை என்று 2 ராஜா. 23:25-ல் வாசிக்கிறோம். கர்த்தருடைய சத்தியத்தை கைக்கொள்ளுகிறவர்களின் வாழ்வில் ஆசீர்வாதம் கிடைக்கும்.

இந்த வருடத்தில் பிள்ளைகள் சத்தியத்தை அறிகிற அறிவில் வளர பெற்றோர்கள் அதிக சிரத்தையுடன் முயற்சி எடுங்கள். சத்தியத்தில் நடக்கிறதென்றால் என்ன? தன் வாழ்க்கைக்கு அடித்தளமாக கிறிஸ்துவின் வார்த்தைகளைக் கொண்டு கட்டுவது. வாழ்வின் எல்லா சூழ்நிலைகளிலேயும் தேவன் மேலுள்ள விசுவாசத்தில் சற்றும் தளராமல் முன்னேறி செல்வது தான். இதற்கு அஸ்திபாரமாக வேதவசனங்களைக் கற்றுக்கொடுப்பதும், அதைக் குறித்து பேசுவதும் பெற்றோர்களின் கடமையாகும்.

## 2.அபிஷேகம் பெற்ற சந்ததி

உன் சந்ததியின்மேல் என் ஆவியையும், உன் சந்தானத்தின் மேல் என் ஆசீர்வாதத்தையும் ஊற்றுவேன் (ஏசாயா 44:3). கடைசி நாட்களில் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன் (அப் 2:17).

தன் தாயின் வயிற்றிலிருக்கும்போதே பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டவன் யோவான் ஸ்நானன் (லூக்.1:15). தன்னுடைய வாழ்வில் அரிய பெரும் காரியங்களை செய்தான். இயேசுவுக்கு வழியை ஆயத்தம்பண்ணினவன். இயேசுவுக்கு ஞானஸ்நானம் கொடுத்தவன். நம்முடைய பிள்ளைகள் இந்த வருடத்தில் அபிஷேகம் பெற, அபிஷேகத்தில் நிரம்பி வாழ உதவி செய்யுங்கள். அபிஷேகம் இல்லாத வாழ்வு ஒரு வெறுமையான வாழ்வு. சீஷர்கள் அபிஷேகத்தைப் பெற்றபின்தான் தேவனுக்காக வல்லமையாய் கிரியை செய்தார்கள். எழும்பி பிரகாசித்தார்கள். எனவே பிள்ளைகளை அபிஷேகத்தில் நடத்துங்கள். ஆவியின் அபிஷேகம் பெறுவதின் முக்கியத்துவத்தை அறியச் செய்யுங்கள். அபிஷேகம் பேதையை ஞானமுள்ளவனாக்கும். அபிஷேகம் நுகங்களை முறிக்கும்.

## 3.வரங்களைப் பெற்ற சந்ததி

அப்பொழுது உங்கள் குமாரரும், குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள். உங்கள் வாலிபர் தரிசனங்களை அடைவார்கள் (அப். 2:17).

இயேசு கிறிஸ்து 12 வயது நிரம்பிய சிறுவனாக இருந்தபோது, எருசலேம் தேவாலயத்தில் போதகர் நடுவில் உட்கார்ந்து அவர்களை கேள்விகேட்டார். அவர் பேசினதைக் கேட்ட யாவரும் அவருடைய புத்தியையும், அவர் சொன்ன மாறுத்தரங்களையுங் குறித்து பிரமித்தார்கள் (லூக்.2:46). பிதாவானவர்; இயேசு கிறிஸ்துவுக்குள் அநேக வரங்களைக் கொடுத்திருந்தார். அதைத்தான் சிறுவயதிலிருந்தே அவர் செயல்படுத்த ஆரம்பித்தார். அந்த வரங்களினால்தான் பிசாசுகளைத் துரத்தினார். வியாதியஸ்தர்களை சொஸ்தமாக்கினார், பல அற்புதங்களைச் செய்தார்.

அன்பான பெற்றோர்களே, உங்கள் பிள்ளைகள் ஆவிக்குரிய வரங்களை நாடும்படி விரும்புங்கள். அவர்களை ஆவிக்குரிய காரியங்களான, ஜெபிப்பதிலும், வேதம் வாசிப்பதிலும், சபையின் காரியங்களில் ஈடுபடச்செய்வதிலும் அதிக ஆர்வம் காட்டுங்கள். பிள்ளைகளை ஊக்கப்படுத்துங்கள். வரங்களை பெற்ற உங்கள் சந்ததி கர்த்தரால் ஆசீர்வாதம் பெற்ற சந்ததியாய் வளரும் என்பதில் சந்தேகமில்லை.

Bible Champions 21' Result மற்றும் மண்டல அளவிலான பரிசுகள் பிப்ரவரி மாதம் உங்கள் மண்டல சிறுவர் ஊழிய பொறுப்பாளர்கள் மூலம் கிடைக்கும்.

AGVBS 22'க்கு இப்பொழுதிருந்தே உங்கள் சபையை ஆயத்தப்படுத்துங்கள். கர்த்தருக்குச் சித்தமானால் இந்த ஆண்டு Offline-ல் (நேரடியாக) நடத்த தேவன் கிருபை தருவாராக. தொடர்ந்து சிறுவர் ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்.

தேவன்தாமே நம்முடைய பிள்ளைகளை கர்த்தரால் ஆசீர்வாதம் பெற்ற சந்ததியாய் மாற்றுவாராக. இந்த வார்த்தைகளை அறிக்கையிட்டு தினமும் உங்கள் பிள்ளைகளுக்காக ஜெபியுங்கள். கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.



சிறுவர் பகுதி

# தெரிஞ்சுக்கோ புரிஞ்சுக்கோ

பாஸ்டர். பெவிஸ்டன்
பூரண கிருபை ஏ.ஜி சபை, கருப்பாயூரணி, மதுரை-20

ஹாய்.. ஹலோ.. எல்லாரும் எப்படியிருக்கிறீங்க? உங்க எல்லாருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள்? இந்த புதிய ஆண்டில் புதிய தீர்மானங்களோடு தேவனை முன்நிறுத்தி வெற்றிநடை போட வாழ்த்துகிறேன். இந்த மாத கதை கேட்க ரெடியாயிருக்கிறீங்களா? வாங்க போகலாம்..

ஆலய மணியோசை அந்தப் பனிபொழிவை கிழித்துக் கொண்டு அந்தப்பகுதி முழுவதும் கணீர் என எதிரொலிக்க, புத்தாண்டு சிறப்பு ஆராதனையில் கலந்து கொள்ள மக்கள் குடும்பம் குடும்பமாக புறப்பட்டுக் கொண்டிருந்தார்கள். கேத்தரீன் இன்றைக்கு குளிர் ரொம்ப அதிகமாக இருக்கிறது. இந்த ஸ்வெட்டரை போட்டுக் கொள்" என தன் மகளிடம் அம்மா ஜென்சி கொடுக்க, "வேண்டாம் மம்மி, ஸ்வெட்டரைப் போட்டுக்கிட்டா புத்தாண்டு புது டிரஸ்ஸ மறைச்சிடும்" என்றாள் கேத்தரீன்.

"சரி, உன் விருப்பம்" என்ற ஜென்சி, தன் கணவரோடு, மகளை அழைத்துக் கொண்டு ஆலயத்திற்கு புறப்பட்டார். ஆலயம் முழுவதும் சீரியல் பல்புகளால் மின்னிக் கொண்டிருந்தது. அழகான கிறிஸ்துமஸ் ஸ்டார் பொன்னிறத்தில் மின்னிக் கொண்டிருந்தது. பாடல் குழுவினர் 'ஸ்தோத்திரம் இயேசு நாதா' என்ற பாடலை இசையோடு மைக்கில் பாடிக் கொண்டிருந்தனர். 'ரொம்பக் குளிர் வாட்டுது. மம்மியின் அட்வைஸ்படி ஸ்வெட்டர் அணிந்து வந்திருக்கலாமோ' என கேத்தரீனுக்குத் தோன்றியது.

ஆலய வளாகத்தின் முன் சாலையின் இருபுறங்களிலும் கையேந்துபவர்களின் கூட்டம் நிரம்பி வழிந்தது. பண்டிகைக் காலங்களில் எங்கிங்கிருந்தெல்லாமோ வந்து இங்கே அமர்ந்து கையேந்துவார்கள். அந்தக் கூட்டத்திலிருந்து ஒரு பெரியவரின் அபயக் குரல் கேட்டது. "அம்மா... தாயே, இந்தக் கண் தெரியாதவனை ஆலயத்தின் வளாகத்திற்குள் கொண்டு போய் விட்டிடுங்கம்மா... இங்கே இருக்கிற கூட்டத்துல என்னால பிச்சை எடுக்க முடியாதும்மா... குளிரும் ரொம்ப வாட்டுதும்மா... இரக்கம் காட்டுங்கம்மா..." எனக் குரல் கொடுக்க, பக்கத்தில் அமர்ந்திருந்த ஒரு பிச்சைக்காரர், "யோவ் பெரிசு... கம்முனு கெட, ரெண்டு கண்ணும் அவுஞ்சி போயி கெடக்கு, கைகள் ரெண்டும் புழுத்து போயி கெடக்கு, உன்ன யாரு கூட்டிப் போய் விடுவாங்க..? பேசாம கெட..." என அதட்டினார்.

கேத்தரீன் காதுகளில் பெரியவரின் அபயக் குரல் கேட்டது. "டாடி, அந்தப் பெரியவரை பார்த்தால் பாவமா இருக்கு. ஹெல்ப் பண்ணுவோமா?" என்றாள். உடனே கேத்தரீனின் அப்பா லாரன்ஸ், "கேத்தரீன் சும்மா வா. அவர் கைகளைப் பார்த்தாயா? ஒரே தொழுநோய். பார்த்தாலே அருவெருப்பா இருக்கு" என்றார்.

அம்மா ஜென்சியோ, "கேத்தரீன் உனக்கு வேற வேலையே இல்லையா?" என கடிந்து கொண்டார்.

பாவம் அந்தப் பெரியவருக்கு உதவ முடியவில்லையே என்ற கவலையோடு, ஆலயத்துக்குள் நுழைந்தாள் கேத்தரீன். அவள் சிறுமிகள் அமரும் இடத்துக்குச்

சென்று அமர்ந்துக் கொள்ள, பெற்றோர்கள் பெரியவர்களுக்கான இடத்தில் அமர்ந்துக் கொண்டனர்.

இரண்டு மூன்று பாடல்களுக்கு பின் யாவரும் எழும்பி நின்று ஆராதிக்க துவங்கினர். கேத்தரீனுக்கு மனம் படபடக்கிறது. அந்தப் பெரியவரின் குரல் திரும்ப திரும்ப அவள் செவியில் ஒலித்துக் கொண்டே இருந்தது. பெரியவருக்கு உதவ முடியாமல் போய் விட்டதே என மிகவும் வருந்திய அவள், இப்பொழுதும் ஒன்றும் கெட்டுப் போய் விடவில்லை. நான் உதவி செய்திட பெற்றோர்கள் தற்போது தடுக்க முடியாது. நான் கண்டிப்பாக அந்தப் பெரியவருக்கு உதவ வேண்டும் என்ற முடிவோடு, ஆலயத்திலிருந்து கிளம்பி வேக வேகமாக வெளியே ஓடினாள்.

"தாத்தா நான் உங்களுக்கு உதவி செய்யட்டுமா? வாருங்கள் உங்களை ஆலய வளாகத்திற்குள் அழைத்துச் செல்கிறேன்" என்றாள். பெரியவர் தட்டுத் தடுமாறியபடி எழுந்தார். அவரின் கைகளைப் பிடித்துக் கொண்டு ஆலயத்திற்குள் அழைத்துச் சென்றாள். "உன் பெயர் என்னம்மா?" எனப் பெரியவர் கேட்க, அதற்கு "என் பெயர் கேத்தரீன்" என்றாள். "நல்ல பேரு, நீ நல்லா இருப்ப" என வாழ்த்தி அனுப்பினார்.

பெரியவரை வளாகத்திற்குள் விட்டு விட்டு ஆலயத்திற்குள் சென்றாள் கேத்தரீன். அவள் செய்தது அவளுக்கு மன நிறைவையும், மகிழ்ச்சியையும் தந்தது.

புத்தாண்டு வாக்குதத்த செய்தியை கேட்க அனைவரும் ஆயத்தமானார்கள். அப்போது, ஒருவர் ஒரு துண்டுச் சீட்டை போதகரிடம் தந்து விட்டுப் போக, அதைப் பிரித்து படித்தப் பின் தன் பிரசங்கத்தை ஆரம்பித்தார் போதகர்.

'அனைவருக்கும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்! வழக்கமாக ஒவ்வொரு புத்தாண்டு தினத்தன்றும் சபை மக்களுக்கு ஒரு போட்டி வைக்கப்படும் என்பதும் அந்தப் போட்டி மிகவும் சஸ்பென்ஸாக இருக்கும் என்பதும் நீங்கள் அறிந்ததே. அந்த வகையில் இந்த ஆண்டு நமது சபையை சார்ந்த மோசஸ் ஐயா ஒரு புதுமையான போட்டியை அவரே முன் நின்று நடத்தினார். நீங்கள் அனைவரும் ஆலயத்திற்கு வரும் வழியில், "அம்மா... தாயே... இரக்கம் காட்டுங்க, குளிர் ரொம்ப வாட்டுது. என்னை பிச்சை எடுக்க வசதியாக ஆலய வளாகத்திற்குள் கொண்டு விடுங்கள்" என ஒரு கண்பார்வையற்ற, குஷ்டம் பிடித்த பெரியவரை கண்டீர்கள் அல்லவா? அந்தப் பெரியவர் வேறு யாருமல்ல, அவர் நமது மோசஸ் ஐயா தான். இப்பொழுது மேடையில் உங்கள் முன் தோன்றுவார்" என போதகர் அறிவிக்க, மேடையில் தோன்றி தன் ஒப்பனையை கலைத்தார் மோசஸ் ஐயா. சபை மக்களின் கரகோஷம் ஆலயம் எங்கும் எதிரொலித்தது.

"நம் மகள் இந்தப் பெரியவருக்குத்தானே உதவ வேண்டும் என்றாள். நாம் அவளை உதவ விடாமல் தடுத்து விட்டோமே. நம் மகளின் எண்ணப்படி உதவி செய்திருந்தால் நம் சபையின் பாராட்டும் பரிசும் கிடைத்திருக்குமே" என கேத்தரீனின் பெற்றோர்கள் நினைத்துக் கொண்டிருக்க, போதகர், "இந்த போட்டியில் ஒரு சிறுமி மட்டும் வெற்றி பெற்றிருக்கிறாா். அந்தச் சிறுமியின் பெயர் கேத்தரீன்" என அறிவிக்க, சபை மக்களின் பலத்த கரகோஷத்தோடு மேடைக்கு ஏறினாள் கேத்தரீன்.

அவளது இரக்க குணத்தை போதகர் பாராட்டியதோடு மட்டுமல்லாது புத்தாண்டு பரிசாக ஒரு ஸ்வெட்டரை கொடுத்து அந்த ஆண்டுக்குரிய முழு கல்வி செலவீனங்களையும் ஏற்றுக்கொண்டார். இந்த சம்பவம் நாமும் கருணை உள்ளத்தோடு வாழ வேண்டும் என்ற உறுதியை எடுக்க அங்குள்ளவர்களுக்கு உதவியது.

அன்பான குட்டி தம்பி தங்காய், பிறருக்கு உதவி செய்யும் மனப்பக்குவம் நம்மில் இருக்கிறதா? கடந்த கிறிஸ்துமஸ், புத்தாண்டு நாட்களில் இரண்டு மூன்று புது டிரெஸ், விதவிதமான சாப்பாடு, பட்டாசு என ஜாலியாக கொண்டாடினோம் அல்லவா? இவைகளில் உங்கள் சார்பாக யாருக்காவது உதவி செய்த ஞாபகம் இருக்கிறதா? நமது 'கர்த்தர் உருக்கமும், இரக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவர்' (சங்.103:8) என்று வேதம் கூறுகிறது. அப்படியானால் நமக்குள்ளும் இத்தகைய சுபாவம் வெளிப்பட வேண்டுமல்லவா?

''நன்மைசெய்யும்படி உனக்குத் திராணியிருக்கும்போது, அதை செய்யத்தக்கவர்களுக்குச் செய்யாமல் இராதே" (நீதி.3:27), "இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் இரக்கம்பெறுவார்கள்" (மத்தேயு 5:7) என்று பரிசுத்த வேதாகமம் கூறுகிறது. இந்த இரு வசனங்களையும் உடனே மனப்பாடம் செய்யுங்க.. வெரிகுட், மனனம் செய்வது நல்லது, அதைவிட இவ்வசனங்களின்படி வாழ்வது அதைவிட ரொம்ப நல்லது.

இந்த புதிய ஆண்டில் உங்களால் இயன்ற உதவியை மற்றவருக்கு செய்ய எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள். உங்கள் கருத்துக்களை சாட்சிகளை 97503 81784 என்ற தொலைபேசி எண்ணிற்கு குறுஞ்செய்தி அனுப்புங்கள். அடுத்த இதழில் சுவாரசியமான மற்றொரு கதையோடு உங்களை சந்திக்கிறேன்.

---

## போட்டி எண் : 90 (சரியான விடை எழுதியவர்கள்)

**செங்கோட்டை:** S.முத்துலெட்சுமி; S.பிரியா; S.பிரேமலதா; கோகிலா; ராணி பிளஸ்ஸிங்; கிரிஜா; ரம்யா; K.மஞ்சு; J.சுமதி; பூங்கோதை; பொம்மி; சித்ரா பிளஸ்சி; L.குளோரி; K.சுபா; விஜிராஜா; மாரிமுத்து தாவீது; K.மகேஸ்வரி; K.ராஜீ; M.கனகவல்லி; S.ஜெயா; ராதாமணி; டோரா; A.மஞ்சு; ஈஸ்வரி; G.முத்துலெட்சுமி; தங்கமணி; பிரபா; M.எஸ்தர்; மயில்ராஜ்; மாது; A.புனிதவள்ளி; E.கலா; T.கலா; ரோஸ்லின்; பியூலா; V.செல்வி | **மதுராந்தகம்** : கிரேஸ் பியூலா ; சுந்தரி; சுனிதா ரோஸ்லின்; சங்கீதா; டோனா; கலையரசி; கற்பகம்; வின்சென்ட் உதயகுமார்; மோனிகா விண்ணரசி; ஹரினி; துளசி; சங்கீதா; பிரின்ஸி; செல்வி; நேசம்; | **திருநின்றவூர்** : மார்த்தாள்; எழிலரசி; ராஜேஸ்வரி; சிவனாந்தம்; ரோஸ்; அம்மு; சுமதி; திரேசா; புவனேஸ்வரி; சிவா; கேத்ரினா; சுவிதா; ஆதாடேரியா;| **ஸ்ரீவில்லிபுத்தூர்** : நித்யா; சத்யா; ஆபிரகாம்; தேவபிரியா; கிறிஸ்டி பிரியா; மெசி; பாஞ்சாலி; அனிதா; குளோரி; புஷ்பா; ஜெயராணி; நெல்சன் செல்வராஜ்; ; | **ஆறுமுகநேரி :** கஸ்தூரிபாய்; ஜாய்ஸ்மேரி; பானுமதி; பிரேமா; இருதய ஸ்டெர்லின்; மேனகா; சுகிர்தா டைட்டஸ்; மீனா; ஆசிரத்னம் | **இறச்சகுளம்** : ஜெஸி; மோனிஷ்; எஸ்தர்; ஷாலினி; கலா; கனகமணி; அமலாவேணி; நளினாஷாலினி; இந்துமதி; | **ஓட்டப்பிடாரம்**: ஞானவடிவு; டெய்சி; முத்துக்குமார்; இஸ்ரவேல் கிருபாகரன்; பானுமதி; சுப்ரமணியன்; சரஸ்வதி; மரியநேசம்; | **ஆலங்குளம் (வி)** : ஸ்டீபன்; பிளாரன்ஸ்; ஸ்டெல்லா; ரெஜினா சாரு; லதா; தாயம்மாள்; கிருபா; பெர்சியாள்; | **தேனி** : பூமணி ஜான்சி; தனம்; கிருபா; கார்த்திகேயாயினி; மீனா; திரவியச்செல்வி; பிரின்ஸி; | **சென்னை** : சந்திரா; மேரிகுட்டி; மெர்லின் ஹெலன் பிரீத்தியா; நிர்மலா எஸ்தர்; ராணி; | **திருச்சி** : சாந்தி; மேரி சுஜாதா; வசந்தி; கிறிஸ்டி மகாலெட்சுமி; சந்திரா; | **திருவள்ளூர்** : நாகஜோதி; செல்வபிரியா; அமலா; ரூத்; ரூத் ஜெபகனி; | **அச்சிறுப்பாக்கம்** : செல்வகுமாரி; கல்பனாதேவி; தமிழ்ச்செல்வி; தெரேசா; செல்வக்குமாரி; தரணி; | **நாசரேத்** : எஸ்தர்; மெர்சி; மேரி; தாசன்மோசஸ்; | **மதுரை** :சுபத்ரா; மேரி; கனகவல்லி; ஞானம்ஜான்; | **தூத்துக்குடி** : சில்வெஸ்டர்; புரூசியா; சகாயமேரி; மாரீஸ்வரி; | **புளியங்குடி** : ஜெபஞானம்; சுந்தரி; ஜெயமணி; பால்

## போட்டி எண் : 90 (சரியான விடை எழுதியவர்கள்)

அமுதாடெய்சி; | **கிருஷ்ணகிரி:** ஐடா; ஆனிமெர்சி; ரேச்சல் அனுசுயா; தனலெட்சுமி | **கடையநல்லூர்** : ஆஷாதேவி; ஸ்டெல்லா; தங்கராஜ்; செல்வி இந்திராணி; | **ஆண்டிபட்டி** : புளோரியா; தேவபாக்கியம்; ஹெலன் மார்கிரேட்; | **வத்ராப்**; சிவகாமி; அருள்செல்வி; ஜெபராணி; | **எடப்பாடி** : ஜோசப்மேரி; சுதா; மாலதி; | **கடாட்சபுரம்** : ரேவதி; சுசிலா; | **வில்லியனூர்** : ஷீபா; செல்லப்பன்; | **கவர்கல்**: சரசுவதி; டானியேல்; மொழி; | **மூலைக்கரைப்பட்டி** : அன்ஸ்லின் ஜெபா; மல்லிகா; | **பாளையங்கோட்டை** : சாந்தகுமாரி; மல்லிகா; | **விளாங்குறிச்சி** : கிறிஸ்டினா; ரித்மா; | **கடப்பாக்கம்** : ஜாய்ஸ் இவாஞ்சலின்; சாம்சன்பால்; | **நெல்வாய்**:அமலா; மலர்விழி; | **மேலமருது (ஆல)** : ரோஜா; ஷாலினி; | **ஆழ்வார்திருநகரி**: இவாஞ்சலின்; பனிமலர்; | **பெருங்குளம்** பியூலா ஜோயல்; கௌசல்யா; | **KTC நகர்** : ரத்னா; பிரேமாரூத்; சில்வியா; | **செங்கல்பட்டு** : தனலெட்சுமி; மகாலெட்சுமி | **குற்றாலம்** : வேளாங்கனி; ரூத்; | **தென்னம்பாளையம்** : ரோஸ்லின் சாந்தி; | **கோவை** : மேரி டென்சில்: குளோரி; | **துடியலூர் (கோ)** : வளர்மதி; | **திசையன்விளை** : ஜெயசீலி; செல்வபாக்கியம் | **கோவில்பட்டி** : வால்டர்சிங் | **இருப்பாளி** : கவிதா; | **சூளைமேடு (செ)** : அருள்மேரி; | **அரும்பாக்கம் (செ)** : மேரி | **கொட்டிவாக்கம் (செ)** : அஞ்சலி; | **பழங்காநத்தம்** : அமுதவல்லி; | **T.N.பாளையம்** : சுஜா; | **இராமன்புதூர்** : லீதியாள்; | **ஓசூர்** : அனிதா; | **திருப்பூர்** : கிருஷ்ணவேனி; | **நாகமலை** ; விஜிலா; | **வெண்ணாம்பட்டி** : எப்சிபா; | **தர்மபுரி** : ரூத்; | **நாகலாபுரம்** : சாராள்; | **பழனி :** பிரீத்தி; | **விருதுநகர்** : நிர்மலா நிம்மி; | **ஆத்தூர் (சே)** : பிளாரன்ஸ்; | **பெங்களூர்** : சாமுவேல்; தேவபிரியா; | **முத்தையாபுரம்** : காபிரியேல் அந்தோணி; | **காஞ்சிபுரம்** : ஜூலியட்: | **பழையகாயல்** : எலிசபெத்; | **செய்யூர்** : எட்வர்ட்; | **திருப்பத்தூர்** ; ரூபி; | **மூக்குபேரி**: சுசிலா; |**கம்மாபுரம்** : சுகிர்தா;|**திருக்கோயிலூர்** : டாரிஸ்; | **கீழ்வேளூர்** : ஜெகன்நாதன் | **தாழையூத்து**: சகுந்தலா; |**உவரி** : ஜேனட்; | **கொட்டாரம்** : ரோபினா; அல்ஜியம்; | **ஏர்வாடி** : மரகதம்; |**திப்பிராயப்பேட்டை**: டெல்பின் விண்ணரசி; |**பாவூர்சத்திரம்** : ஜெசிலா; | **நீலகிரி** : புஷ்பமாலா; சார்லஸ்; |**இடைகால்** : செல்வி; | **திருவாரூர்** : பாஸ்டியன்; | **சுரண்டை** : குளோரி ஞானம்; | **களக்காடு** : விமலாபாய்; ரோஸ்லின்; | **தஞ்சாவூர்** : தேவகுமார்; | **கடலையூர்** : ஆபிரகாம்; |**எடப்பாடி** : சௌந்தரியா | **அரியலூர்** : அமுதா; |**வேம்பகோட்டை (ஆ)** : ரோஸ்லின்; | **புதூர்** : கீர்த்தனா; |**நெய்யூர்** : ஷீபா; | **வேலூர்** : தேவாசீர்வாதம்; | **வில்லுக்குறி** : கிருஷ்ணகுமாரி; | **புதுக்கோட்டை** : பெனாயா; லலிதா; மின்னல்கொடி; | **சின்னாளபட்டி** : சலோமி; |**திருவாரூர்** : கிளாமன்டினா; சுந்தரமூர்த்தி; | **கூடலூர்** : கெத்சியா ஒய்ட்; |**புதுச்சேரி** : மீனா; |**ஏர்காடு** : டேவிட்; | **நாகப்பட்டினம்** : வின்சென்ட்ராஜ்; | **பெரியகுளம்** : மனோகாசிராஜ்; | **பரமத்திவேலூர்** : பாமா; | **கீழ்வேளூர்** : கிரேனாப்பு; | **கல்லல்** : எபி; அபிஷாக்; | **திருப்பத்தூர்** : ஜோதி; கிரிஜா சத்யா; |**பெருமாள்புரம்** : ஜாய் இந்ரா; | **மேலபாளையம்** : வனிதா; | **கூடலூர்** : மஞ்சுளா; | **கம்பம்** : ஜோதிமணி; |**அகஸ்தியர்பட்டி** : நிர்மலா; | **கரூர்** : கங்கா; | **வேலூர்** : தேவகுமார்; | **பசுவந்தனை** : கிருபா; | **அம்பாசமுத்திரம்** : ஹரி லீலா; | **ஓசூர்** ; ஜெமிந்தா; | **கொங்கந்தான்பாறை** : சந்திரா; | **உடுமலைப்பேட்டை** : சூசன்னாள்; ஐடா | **மூக்குபேரி** : செல்லத்தாய்ராணி; | **உக்கிரன்கோட்டை** : குழந்தை தெரசம்மாள்.

---

## போட்டி எண் -90 (லூக்கா சுவிசேஷம்) சரியான விடைகள்

1.தேவனுடைய வார்த்தையைக் கேட்டு அதைக் காத்துக்கொள்கிறவர்கள்; | 2.சீமோன்; | 3.மனந்திரும்புகிற ஒரு பாவியினிமித்தம்; | 4.சீலோவாம்; | 5.ஆமோஸ்; | 6.ஸ்திரப்படுத்து; | 7.ஏழைகளையும், ஊனரையும், சப்பாணிகளையும், குருடரையும்; | 8.யோவான்; | 9.சகேயு; | 10.யோவன்னாள் ; | 11.எம்மாவு; | 12.நியாயப்பிரமாணமும், தீர்க்கதரிசன வாக்கியங்களும்; |

### போட்டி எண் -90 (லூக்கா சுவிசேஷம்) சரியான விடைகள் ....

13.தீர்க்கதரிசியானவர்; | 14.இடறல்கள் வராமல்போவது; | 15.யோசேப்பு; | 16.ஒலிவமலை; | 17.அகஸ்துராயன்; | 18.கலப்பையின்மேல் தன் கையை வைத்துப் பின்னிட்டுப் பார்க்கிற எவனும்; | 19.அக்கினி; | 20.வேலையாள்; | 21.வைத்தியனே உன்னைத்தானே குணமாக்கிக்கொள்; | 22.தேறினவன்; | 23.இராயனுக்கும், தேவனுக்கும்; | 24.பரிசேயன்; | 25.சீமோன் பேதுரு.

---

## பரிபூரண ஜீவன் போட்டி எண் - 91

### (யோவான் சுவிசேஷம், இருப்பிடத்துடன் விடை எழுதவும்

1. எது கூப்பிடும் எது சாட்சியிடும்?
1. ஒருவன் -------- வரமாட்டான்.
2. ஒருவன் -------- பானம் பண்ணக்கடவன்.
3. ஒருவன் -------- மரணத்தைக் காண்பதில்லை.
4. ஒருவன் -------- பிதாவானவர் கனம் பண்ணுவார்.
5. ஒருவன் -------- வசனத்தைக் கைக்கொள்ளுவான்.
6. ஒருவன் -------- கனிகளைக் கொடுப்பான்.
7. ஒருவன் -------- செவி கொடுப்பார்.
8. ஒருவன் -------- இடறுவான்.
9. ஒருவன் -------- உலர்ந்து போவான்.
10. ஒருவன் -------- பிரவேசிக்கமாட்டான்.
11. ஒருவன் -------- ஒருவரிடத்திலுமில்லை.
12. ஒருவன் -------- காணமாட்டான்.
13. குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் --------
14. -------- உங்கள் பாவங்களிலே சாவீர்கள்.
15. மரித்தோர் -------- காலம் வரும்.
16. உம்முடைய -------- சத்தியம்.
17. -------- அறியாதவர்களாகிய இந்த ஜனங்கள் சபிக்கப்பட்டவர்கள்.
18. என்னை விசுவாசிக்கிறவன் -------- பிழைப்பான்.
19. இந்த உலகத்தின் -------- வருகிறான் அவனுக்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை.
20. என்னுடைய -------- உங்களுக்குக் கொடுக்கிறேன்.
21. -------- விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள்.

விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் 8.02.2022

சரியான விடை எழுதி அனுப்புகிறவர்கள்
தங்கள் முழு முகவரியுடன் விடையை எழுதி அனுப்பவும்.



**விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி**

**Mrs.சாந்திபால்**
16/50 கொல்லம் மெயின் ரோடு, சீயோன் ஏ.ஜி. சர்ச்
SETC BUS டிப்போ அருகில், செங்கோட்டை - 627 809
தென்காசி (மாவட்டம்). செல் : 88077 18002

ASSEMBLIES OF GOD

CHRIST'S AMBASSADORS · ASSEMBLIES OF GOD YOUTH

...நான் எனக்குள்ளே வல்லமையாய்க் கிரியை நடப்பிக்கிற அவருடைய பலத்தின்படி போராடிப் பிரயாசப்படுகிறேன்.

கொலோசெயர் 1:29

# மத்திய வாலிபர் முகாம் 2022

ஜனவரி **14** வெள்ளி

9 am to 4 pm

2022

பதிவு கட்டணம் ₹100 மட்டுமே

கருப்பொருள்:

## தேவ பலத்தின்படியே...

according to His strength...

### மதுரை
ஏ.ஜி கேம்ப்சைட்
நாகநீர்த்த விலக்கு.

### பாளையங்கோட்டை
பாலன்ஸ் மஹால்
கிருஷ்ணாபுரம்.

### திருச்சி
திருச்சி சிட்டி ஏ.ஜி சபை
பொன்நகர், திருச்சி.

### நாமக்கல்
நாமக்கல் ஏ.ஜி சர்ச்
அன்புநகர், நாமக்கல்.

### கோவை
கிரேஸ் ஏ.ஜி சபை
துடியலூர், கோவை.

### வேலூர்
ஏ.ஜி சர்ச்
காந்திநகர், வேலூர்.

### சென்னை
NLAG ஏ.ஜி சர்ச்
சின்னமலை, சென்னை.

### பாண்டிச்சேரி
அல்லேலூயா ஏ.ஜி சபை
பாண்டிச்சேரி.

மத்திய வாலிபர் முகாம் 8 இடங்களில் நடைபெற உள்ளதால் தங்களுக்கு அருகில் உள்ள முகாம் மையங்களில் கலந்துகொள்ளுங்கள்.

| Rev. D. Solomon | Rev. Y. Sorbon | Rev. S. Gopinath | Rev. Steve Asir | & 66 Sectional CA Leaders. |
|---|---|---|---|---|
| (President) | (Vice President) | (Secretary) | (Treasurer) | |
| 98652 79185 | 94423 90693 | 93455 31737 | 96771 00110 | |

Registered News Paper Regd. No. 8206 / 62

# வாசகர்கள் அனைவருக்கும் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

# Happy New Year 2022

"வருஷத்தை உம்முடைய நன்மையால் முடிசூட்டுகிறீர்..." (சங்கீதம் 65:11).

"வருஷத்தின் துவக்கமுதல் வருஷத்தின் முடிவுமட்டும் எப்பொழுதும் உன் தேவனாகிய கர்த்தரின் கண்கள் உன்மேல் வைக்கப்பட்டிருக்கும்" (உபாகமம் 11:12).

## எழுப்புதலின் 10 ஆண்டுகள்

**DECADE OF REVIVAL**
**2021-2030**

ஜெபிப்போம்! செயல்படுவோம்! சுதந்தரிப்போம்!

BOOK POST

If Undelivered please return to
**PARIPOORANA JEEVAN**
30, Navalar Nagar, Madurai - 625 016. Ph: 0452 2301165